நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young friends of fmpb

இளைஞர் மாத இதழ்



# நேர்வழியில் சென்றிட வா!

Vol 30-Issue 09 - September - 2025

Private circulation only

# தூபப் பலிபீடம்
## THE ALTAR OF INCENSE



Rev. Selvinraj G Charles

துதிக்கலாம் வாங்க - ஆசரிப்புக் கூடாரம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான இளம் வாலிபர்களே! இயேசுவின் இன்ப நாமத்தில் உங்களை வாழ்த்தி, உங்கள் அனைவரையும் ஆண்டவரை ஆராதிக்க வரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

"தூபப்பீடம்" இது கிரேக்க மொழியில் "தூபியாஸ்டீரியன்" என்பதாகும். இதன் பொருள் பிராத்தனை அல்லது பரிந்துரையைக் குறிக்கும். இந்த தூபப்பீடம் கூடாரத்தின் புனித இடத்தில் அமைந்திருந்தது. இது ஒரு தங்க பலிபீடமாகும். வேதாகமத்தில் தூபம் முதன்மையாக ஜெபம், துதி வழிபாடு கடவுளின் பிரசன்னத்தைக் குறிப்பது போல் நாமும் ஒவ்வொரு நாளும் இந்த தூபப் புகை மேல் நோக்கி செல்வது போல், நமது ஜெபமும், துதியும் ஆண்டவரை நோக்கி செல்லும் போது ஆண்டவர் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. இது கடவுளுக்கு ஒரு மகிழ்ச்சியான காணிக்கையாகவும் பார்க்கப்பட்டது.

### ▸ பிராத்தனையின் சின்னம் (Symbolish of Prayer):

இது தூபப்பீடத்தின் முதன்மையானது. அதன் பிராத்தனையின் பிரதிநிதித்துவமாகும். இந்த தூபப் பீடத்திலிருந்து மேலே எழும்பிவரும் புகை, கடவுளின் பிரசன்னத்தை நோக்கி ஏறும் பிரார்த்தனைகளுக்கான ஒரு காட்சி உருவகமாகும். இது விசுவாசிகள் மற்றும் இறைவனின் உறவிலுள்ள ஜெபத்தின் முக்கியத்துவத்தை நமக்குக் காட்டுகிறது. சங். 142:2இல் தாவீது பண்ணின விண்ணப்பத்தைப் பார்க்கின்றோம். "அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்". இந்த ஜெபத்தின் அடையாளம்தான் இந்த தூபப்பீடமாகும். தூபத்தில் எழும்பிய புகை இஸ்ரவேலர் கடவுளுக்கு செலுத்தும் ஜெபங்களையும், வேண்டுதல்களையும் அடையாளப்படுத்துகிறது.

### ▸ பரிந்துரை (Pleasing Aroma):

தூபப்பீடம் பரிந்து பேசுதலுடன் இணைக்கப்பட்டது. மனிதகுலத்திற்காக கிறிஸ்துவின் பரிந்துரைப் பணியை அடையாளப்படுத்தும் வகையில் ஆசாரியர்கள் இந்தப் பலிபீடத்தின் மீது தூபம் காட்டுவர். நாமும் நமது ஜெபம் மற்றும் துதியின் மூலம் நமது தேவைகளை ஆண்டவருக்கு தெரியப்படுத்துவோம்.

### ▸ இனிமையான நறுமணம் (Pleasant Aroma):

இந்தத் தூபம் எப்படி செய்ய வேண்டும் என கர்த்தர் மோசேக்கு (யாத். 30:34-38) கற்றுக் கொடுத்தார். மேலும் அது காலையிலும், மாலையிலும் எரிக்கப்பட வேண்டும். இது எரிக்கப்படும் போது தூபத்திலிருந்து வரும் இனிமையான நறுமணம் கடவுளுக்கு பிரியமானது மட்டுமல்ல, கடவுளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருப்பதைக் குறிக்கிறது. அதுபோல நமது ஆராதனையும், துதியும் இந்த நறுமணத்தைப் போல் ஆண்டவருக்கு இனிமையாக இருக்க வேண்டும். பரிசுத்தர்களின் ஜெபங்கள் இனிமையான மணம் கொண்ட காணிக்கையாகக் கருதப்படுகிறது. எபி. 9:3-4 என்ற வசனம் இந்த பலிப்பீடத்திலிருந்து வரும் தூயப் புகை எவ்வாறு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் என்பதை நமக்குக் காட்டுகிறது.

### ▸ மகா பரிசுத்த ஸ்தலத்துடனான தொடர்பு (Communication with the Holy of Holies):

இந்த தூபப்பீடம் கடவுளின் பிரசன்னத்தை நமக்கு அடையாளப்படுத்துகிறது. இது கடவுளின் பிரசன்னத்தை அணுகுவதில் ஜெபம் மற்றும் பரிந்துரையின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் கூடாரத்தின் மிகவும் புனிதமான பகுதியான மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படும் தூப கலசம் இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படும் (வெளி. 5:8) ஜெபத்தைக் குறிக்கிறது. ஜெபம் மற்றும் துதிகள் நாம் தேவன் மேலே சார்ந்துக்கொள்ளும் காரியத்தையும் குறிக்கிறது. இயேசுவின் நாமத்தினாலாகிய ஜெபம் (தூபவர்க்கம்) எப்பொழுதும் நம்முடைய இருதயங்களிலிருந்து தேவனை நோக்கி நித்திய தூபமாய் ஏறெடுக்கப்பட வேண்டும் (யாத். 30:8). நம்முடைய ஜெபம் மற்றும் துதி கர்த்தருக்கு தூபமாய் ஏறெடுக்கப்பட வேண்டும்.

### ▸ தூய்மை மற்றும் புனிதம் (Purity and Holiness):

பழைய ஏற்பாட்டில் தூபத்தின் குறிப்பிட்ட கலவை மற்றும் தயாரிப்பு, வழிபாட்டில் தூய்மை மற்றும் பரிசுத்தத்தின் அவசியத்தைக் காட்டுகிறது. தூபம் கவனமாக தயாரிக்கப்பட்டது போலவே ஜெபமும் நேர்மையுடன் இருக்க வேண்டும். இதைக் குறித்து கர்த்தர் மோசேயிடம் "இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்யவேண்டிய முறையின்படி உங்களுக்காகச் செய்துகொள்ளலாகாது" (யாத். 30:37) என்றார். இதில் இரண்டு காரியம் அடையாளமாய் இருக்கிறது.

முதலாவது நம் சொந்த தகுதியினால் தேவனுக்கு ஜெபத்தை ஏறெடுக்க முடியாது. இயேசு நமக்களித்த தகுதியினாலோ அல்லது பரிசுத்தமானவர்கள் என்ற எண்ணத்தினாலோ பதில் கிடைக்கும் என்று நாம் ஜெபிக்க முடியாது. ஏனென்றால் அந்த ஜெபம் இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படவில்லை. இரண்டாவது நாம் ஜெபிக்கும்போது சொந்த ஆதாய நோக்கோடு ஜெபிக்கக் கூடாது. நாம் எதைச் செய்தாலும், தேவ நாமம் மகிமைப்படவே செய்கிறவர்களாக இருக்க வேண்டும் (1கொரி. 10:31). "பிதாவின் நாமம் மகிமைப்படவும், அவருடைய இராஜ்யம் பூமியிலே ஸ்தாபிக்கப்படவும், அவருடைய சித்தம் செய்யப்படவும்" என்றே இயேசு ஜெபிக்க கற்றுக் கொடுத்திருக்கின்றார்.

இந்த தூபப்பீடத்தில் நாம் ஜெபிக்கும் மற்றும் துதிக்கும் எல்லா காரியமும் பிதாவின் நாமம் மகிமைக்காகவே ஏறெடுக்கப்பட வேண்டும். இதினிமித்தமே நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் அதிக பெலனுள்ளதாக இருக்கிறது. ஏனென்றால் அவன் செய்யும் எல்லாவற்றிலும் தேவநாமம் மகிமைப்பட வேண்டும் என்பதையே நாடுகிறேன் (யாக். 5:16). கூடாரத்தில் தினமும் தூபம் எரிக்கப்பட்டது போல நாமும் எக்காலத்திலும், எல்லா நேரத்திலும் ஆண்டவரைத் துதித்து போற்ற வேண்டும். இது மக்கள் கடவுளுக்கு செலுத்தும் வழிபாடு, நன்றி மற்றும் விண்ணப்பங்களை நினைவூட்டுவதாக இருந்தது. தூபம் கடவுளின் எழுப்புதலின் அடையாளம்.

**நாமும் ஆண்டவருக்காக எழும்பிப் பிரகாசித்து அவரை ஆராதிப்போம் வாருங்கள்!**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

இளசுகள் நாலும், இலை சாப்பாடும் - 5 & 22
ஏன் அநேகர் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கிறார்கள்? - 8
பாலும் தேனும் ஓடும் தேசம் - இஸ்ரேல் - 10
தலசீமியா மற்றும் ஹீமோபிலியா - 12
காப்பீட்டு மோசடிகள் - 14
கோபப்படுங்க ப்ளீஸ் - 18
நீதிமானின் வாசற்படியில் - 19
கிழக்கு வாசல் - 23

# நேர்வழியில் சென்றிட வா!

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

**நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:21)**

கர்த்தர் நம் வாழ்க்கையைப் பற்றி கரிசனை உள்ளவராயிருக்கிறார். நாம் எப்படி வாழ்கிறோம், எந்த வழியில் செல்கிறோம் என்பது முக்கியம். நாம் நமக்கு விருப்பமான வழியில் செல்லவே எப்போதும் விரும்புவோம். அது நேர்வழியாகவோ அல்லது தவறான வழியாகவோ இருக்கலாம். ஆனால் கர்த்தர் நாம் எப்பொழுதும் நேர்வழியாக செல்லவே விரும்புகிறார். கர்த்தருடைய வழியைத் தெரிந்துகொள்ள அவருடைய வார்த்தையை (பைபிள்) படிக்க வேண்டும். அவருடைய வார்த்தையை கவனமாக, அமைதியாக படித்து, தியானிக்கும் போது அவருடைய மெல்லிய சத்தத்தைக் கேட்டு, அவர் நடத்தும் வழியில் நடப்போம் (நடத்தப்படுவோம்). கர்த்தர் நம்மை நடத்தும் பாதையை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றால் நம் இருதயங்களைச் சரிசெய்து அவருடைய சத்தத்தைக் கேட்க வேண்டும்.

அன்பான தம்பி, தங்கையே! இதை வாசிக்கும்போது நீ எப்படிப்பட்ட வழியில் நடந்து கொண்டிருக்கிறாய் என்பதை சிந்தித்து பார்! அநேக நேரத்தில் நீ சுயமாய் தெரிந்துகொண்ட வழியில் நடந்து, அதனால் பிரச்சனைகளையும், தோல்விகளையும் சந்தித்துக் கொண்டிருக்கலாம். இதிலிருந்து நீ எழும்பிவர முடியாமல் ஒரு வேளை வழி தவறி போயிருந்தால், கர்த்தருடன் ஒப்புரவாகி என்னை உம்முடைய நேர் வழியில் நடத்தும் கர்த்தாவே என்று அர்ப்பணித்து ஜெபிக்கும்போது அவர் உன்னை, உன் வாழ்வின் கடைசி மட்டும் அற்புதமாய் நடத்த வல்லவராயிருக்கிறார்.

***உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி. 3:6).***

கர்த்தருடைய கிருபையினாலும், உங்களுடைய ஜெபங்களினாலும் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தேசிய உபவாச ஜெபம் மற்றும் வாலிபர் கூடுகைகளை (பாடி, நாசரேத், மார்த்தாண்டம், சூளகிரி, ராசிபுரம், குற்றாலம், ரெட்ஹில்ஸ்) கர்த்தர் ஆச்சரியமாய் நடத்தி தந்தார். அவருக்கே துதி கனம் மகிமை உண்டாகட்டும்.

வாலிபர் கூடுகைக்காக ஜெபித்து, உழைத்து, கொடுத்த அனைத்து தலைவர்கள், வாலிப தன்னார்வத் தலைவர்கள் அனைவருக்கும் இயக்கமாய் நன்றி சொல்கிறோம். தொடர்ந்து இம்மாதம் நடைபெறவுள்ள கூடுகைகள், பின்தொடர் ஊழியங்கள் தடையின்றி நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தருடைய சித்தத்தின்படி நீங்கள் அவருடைய நேர்வழியில் சென்றிட ஜெபித்துக்கொள்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி



# நேர்வழி ஊழியம்

## ஆபிரகாமின் ஊழியக்காரன்

Mr. Isaac Kamalesh

TORAH MISSION

1st WEEK MESSAGE

ஆகமங்களிலிருந்து முதல் வாரம் தோறும் நாம் கற்றுக் கொண்டு வருகிற ஊழிய முறையில் இந்த இதழின் முதல் வார செய்தியாக *“நேர்வழி ஊழியம்”* என்ற தலைப்பில் பார்க்க இருக்கிறோம். யோசிக்க சற்று வித்தியாசமாக இருந்தாலும் உண்மையில் இன்று அவசியமான ஒன்று. அது மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் இருபத்தி நான்கு மணி நேரமும் சிந்திக்க வேண்டிய ஒன்று என்று ஆதியாகமம் இருபத்தி நான்காம் அதிகாரத்தில் இந்த ஊழியத்தைக் குறித்து நாம் காணலாம். இதற்கான வசனம் அதன் இரு மடங்கான எண்ணில் வாசித்துக்கொள்.

எஜமான் மற்றும் வேலையாள் இன்று நடைமுறையில் சொல்ல வேண்டுமானால் எம்ப்லாயர் மற்றும் எம்ப்லாயி (*Employer and Employee*). இப்போது இருக்கிற உறவு முறையை நாம் மனதில் கொள்ளாமல் வேதாகமக் காலத்தில் சொல்லப்பட்ட உறவுமுறையை நாம் சற்று சிந்தித்தால் இது எளிதில் புரியும். நாம் இந்த செய்திக்குள் செல்லும் முன் எஜமான் மற்றும் வேலையாள் உறவு முறையைப் புரிந்தாக வேண்டும். அதாவது எஜமான் வேலையாள் என்பது வாழ்நாள் உறவு முறை மட்டும் அல்லாமல் எஜமான் வீட்டிலோ அல்லது அவனது அதிகாரம் செல்லும் பிரதேசத்திலோ தான் அவர்கள் வாழ்வு அமைந்திருக்கும். இவர்கள் எஜமானின் குடும்பத்தோடு நெருங்கிய வட்டத்தில் வாழ்பவர்கள் மட்டுமல்லாமல், இவர்களில் ஒரு சிலர் பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் அந்தக் குடும்ப உறுப்பினர் போன்றே செயல்படுவார்கள் என்றால் மிகையாகாது. எனவே, ஆபிரகாமின் ஊழியக்காரன் பெயர் எலியேசர் என்று வேதாகமத்தில் அதுவும் ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கு நாம் படிக்கப் போகும் வேலைக்காரன் பெயர் தெரியவில்லை. இவரை *“பெயர் அறியாத வேலைக்காரன்”* என்று சொன்னால்தான் சத்தியம் நமக்கு நன்றாக புரியும்.

சரி, வேலைக்காரனுக்கு எஜமான் கொடுத்த வேலை எது என்று பார்த்தால் தோட்ட வேலையோ அல்லது கிணறு தோண்டும் வேலையோ அல்ல. தன் ஒரே பேறான குமாரனுக்கு மணவாட்டியைத் தேடி அழைத்து வரும் பொறுப்பு. இது அதிர்ச்சியான செயலாக இருந்தாலும் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி “எஜமான்” (ஆபிரகாம்) பெயர் மறைக்கப்பட்ட வேலைக்காரனிடம், தன் மகன் ஈசாக்கு என்னும் மணவாளனுக்கு அழகும், ரூபவதியும், கன்னியுமான மணவாட்டி (ரெபெக்காளை) அழைத்து வரச் சொன்ன ஊழியம் .

இதில் வேலைக்காரன் சொன்ன சொற்றொடர் “என்னை நேர்வழியாய் நடத்தி வந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தர்” இதில் நீயும் நானும் எதைக் கற்றுக் கொள்ளப் போகிறோம். இந்த வேதப்பகுதியை வாசிக்காத நிச்சயதார்த்த வீடு இல்லை என்று சொல்லலாம். ஆனால், நாம் காலம் காலமாக அதை ஒரு சரித்திரம் போன்று வீட்டு விசேஷங்களுக்கு மட்டும் பயன்படுத்துகிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால் “பிதா தன் குமாரனுக்கு மணவாட்டியாகிய சபையை அழைத்து வரும் பொறுப்பை பரிசுத்தாவியிடம் கொடுத்துள்ளார் என்பதுதான். இந்த ஆபிரகாம் “பிதாவுக்கு” அடையாளம். பெயர் இல்லாத வேலைக்காரன் “பரிசுத்த ஆவி”. இவரை நாம் காண இயலாது. இவரின் பணி சபை மணவாளனோடு சேர்ந்த பிறகு முடிந்து விடும். இந்த வேலைக்காரனைப் பிறகு வேதத்தில் எங்கும் காண முடியாது.

இப்போது மேலும் ஒரு ஞான அர்த்தத்தைப் பார்ப்போம். வேலைக்காரன் தன்னை அறிமுகப்படுத்தும் போது *“நான் ஆபிரகாமின் வேலைக்காரன்”* என்று சொல்லுகிறான். தன்னைக் குறித்து ஒரு வார்த்தை கூட சொல்லமாட்டான். ஆனால் மனவாட்டியிடம் சொல்லும்போது ஈசாக்கை *“அவர் தான் என் எஜமான்”* என்பான். இதை ஆழ்ந்து தியானித்தால் *“திரித்துவத்தையும்”* சற்று உணர்ந்து கொள்ள முடியும்.

இப்போது செய்தியின் கடைசிப்பகுதிக்கு வருவோம். தேவன் உனக்குக் கொடுக்கும் பணி அல்லது ஊழியத்தை மட்டும் குறிக்கோளாக எடுத்துப் புறப்படும் போது உன் எல்லா தேவையையும் அவர் தன் சபையைக் கொண்டு சந்திப்பார். நீ இந்த வேதப்பகுதியில் சொல்லப்பட்டது போல பொறுமையுடன் தேவசித்தம் மற்றும் திட்டம் என்ன என்பதை அறிந்து அமைதியாக காத்திருந்து முன்னேற வேண்டும். உன் ஊழியம், உன் குடும்பம், உன் தேவை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், பத்து ஒட்டகங்களின் தாகத்தை ஒரு பெண்ணைக் கொண்டு தீர்த்தவர், உன் அனைத்து தேவைகளையும் சந்திக்க ஆட்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

**“நீ எஜமானின் கட்டளையை மட்டும் செய்ய முன்வரும்போது”**

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh

சென்னை, பெங்களூர் ஹைவேயில் உள்ள "தினை உண்டிச்சாலை' யில் நால்வரும் கூடினர்.

ரகசியம்: டேய், இது மனுஷங்க சாப்பிடுற இடம் தானா?

விஷயம்: ஆமாடா இதுல என்ன சந்தேகம்.

ரகசியம்: அப்படின்னா "உண்டிச்சாலைனா'

விஷயம்: ஹோட்டல்னு அர்த்தம்

ரகசியம்: ஓஓஓ... தூய தமில்லு...

சத்தியன்: தமில்லு இல்லடா... தமிழ் (செம்மொழி நம்மகிட்ட படுற பாடுயிருக்கே...)

விஷயம்: சரி உனக்கு 'தினை'யின் அர்த்தம் தெரியுமா?

சத்தியன்: அதுவும் தெரியாது.

விஷயம்: 'தானியங்கள்" அர்த்தம்.

ரகசியம்: தானியத்தை வைத்து எப்படிடா மதிய சாப்பாடு போடுவாங்க.

விஷயம்: நீ இதுவரை "கம்பஞ்சோறு', 'வரகு சாதம்', 'தினை புலாவ்', 'சாமை சாதம்' இதெல்லாம் கேள்விப்பட்டதே இல்லையா?

ரகசியம்: ஓ இவ்வளவு வகைகளா? சரி, சரி சாப்பிட்டு பார்ப்போம்.

விஷயம்: இப்போல்லாம் - இப்படி தினை வகை சாப்பாடு காலையில் தோசை, ஈவினிங் ஸ்நாக்ஸ்

சாதுரியன்: ஓ இதுலயும் பேஷனா.

விஷயம்: அவுங்க நைட்டுல "மிட்நைட் தோசை' "மிட்நைட் பிரியாணியும்' சாப்பிடுவாங்க.

ரகசியம்: ஓஓ... இந்த இரண்டையும் செய்யுறது ஒரே ஆட்களா !!!

விஷயம்: சாப்பாட்டு விஷயத்துல நமக்கு குழப்பம் தீரல அப்படிதானே சத்தியன்.

சத்தியன்: 'சரியா சொன்னே. ஆகமங்கள கொடுக்கப்பட்டதுல்ல, இத சாப்பிடு / இத சாப்பிடாத - அப்படின்னு சொன்னா, இது இஸ்ரவேலர்களுக்குன்னு சொல்லுவாங்க. ஆனா அதுல ஆசீர்வாதங்கள் மட்டும் வேணும்னு சொல்லுவாங்க - இதை புரிய வைக்க முடியாது. அவங்களும் புரிஞ்சிக்க மாட்டாங்க. அப்படித்தானே ரகசியம்.

ரகசியம்: அதை ஏன் என்கிட்ட சொல்ற (அனைவரும் சிரிப்பு) (சரி என்ன ஆர்டர் பண்ணலாம்?) - (டேய் ரெண்டு வகையில ரெண்டு பிளைட் ஆர்டர் பண்ணுங்க) (டேஸ்ட் பார்த்து பிறகு நம்ம ஆர்டர் பண்ணலாம். வேஸ்ட்டாயிடக் கூடாது)

சாதுரியன்: (ஒன்னு செய்யலாம் தினை, சாமை, வரகு மூன்று சாப்பாடு ஆர்டர் பண்ணலாம் - பிறகு சைடு டிஷ் ஆர்டர் பண்ணலாம்.)

விஷயம்: டேய், என்ன யாக்கோபு ஆட்டுக்குப் போட்ட மாதிரியே சொல்லுற.

ரகசியம்: யாக்கோபா, அவரு ஆட்டுக்குட்டிக்கு சாப்பாடு போட்டதெல்லாம்மா பைபிள்ள எழுதி இருக்கு.

விஷயம்: சரியா கேட்ட ஆதியாகமம் 30: 37-39ல எழுதியிருக்கு.

சத்தியன்: (ரகசியத்தைப் பார்த்து) உனக்கு தெரியுமா?

ரகசியம்: தெரியும் ... ஆனா அர்த்தம் தெரியாது.

சாதுரியன்: டேய் யாராவது பைபிள் app ஓபன் பண்ணி அந்த வசனத்தை அப்படியே வாசிச்சா நல்லா இருக்கும்.

சத்தியன்: யாக்கோபு பச்சையாய் இருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் மரங்களின் கொப்புகளை வெட்டி, இடையிடையே வெண்மை தோன்றும்படி, பட்டை உரித்து, தான் உரித்த கோப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்பான். ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு. ஆடுகள் அந்த கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது.

(ஆர்டர் பண்ண சாப்பாடு வந்து விட்டது.)

சத்தியன்: டேய், நல்லா வாசிங்கடா. அது ஆடுகளுக்குச் சாப்பிட கொடுக்கல. எதிர்த்தாப்ல ஆடுகள் பார்க்கும்படி தான் போட்டான். (எல்லாரும் சிரிப்பு)

சத்தியன்: இங்க நீங்க சாப்பிடல, ஆர்டர் பண்ணிருக்கீங்க.

(ஒவ்வொவரும் டேஸ்ட் பண்ணிப் பார்த்து யாரும் நல்ல ரிசல்ட் சொல்லல)

விஷயம்: ஆனா வருஷத்துல ஒரு நாள் இப்படி சாப்பிடலாம்.

ரகசியம்: இவன் என்னடா காதுல மெல்ல கேக்குறான்.

சாதுரியன்: சிரித்துக் கொண்டே.... இப்படி சாப்பிட்டால் நமக்கு கலரா பிள்ளை பிறக்குமான்னு கேட்கிறாண்டா.

விஷயம்: வாய்ப்பில்லை ராஜா ... வாய்ப்பில்லை. வேணா கருப்பா பிறக்கும். ஏன்னா இது தமிழர் பாரம்பரிய உணவு.

ரகசியம்: சரி... மெல்ல சாப்பிட்டுகிட்டே நம்ம வாசித்த யாக்கோபு ஆடு மேட்டருக்கு போவோம்.

சத்தியன்: "அன்றன்றுள்ள ஆகாரம்' இன்று நமக்கு இதுதான்.

(தொடர்ந்து)

இத நம்ம ஆளுங்க மூன்று மரங்களும் பற்றி படிச்சி அலசி ஆராய்ந்து கடைசில காரியத்த விட்டுருவாங்க.

சாதுரியன்: நான் படிச்சது உங்களோட ஷேர் பண்றேன். (மூவரும் சொல்லு சொல்லு). மொதல்ல இங்க நம்ம படிக்க வேண்டியது ஆறு குறிப்புகள். அதாவது மூன்று மரங்கள், குச்சி (ROD), உரிதல் , வெள்ளை பட்டை என எளிதாகக் கொண்டால் அது விளங்கும். சூழ்நிலையை பார்த்தால் லாபான், யாக்கோபுக்கு ஏறக்குறைய 10 முறை சம்பளத்தை மாற்றுகிறான். இங்க யாக்கோபு சோர்வு, மனஉளைச்சல் மற்றும் மனசோர்வு என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

விஷயம்: பாவம் தான் யாக்கோபு இல்லடா. ஓசியா போட்டு உடைச்சிட்டாரு. "யாக்கோபு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான்'

ரகசியம்: நம்ம எப்படியாம்.

விஷயம்: சரி சரி பொதுவான உண்மையைச் சத்தமா பேசக் கூடாது.

-இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம்



# சொந்த ஜனங்களுக்கான ஊழியம்

## மொர்தெகாய்

Rev. Daniel Gnanapragasam

OT MISSION

2nd WEEK MESSAGE

**A gate is not just making ways to in and out, but choosing the choice of good and bad.**

"மொர்தெகாய் ராஜாவின் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருந்தான்" என்ற சொற்றொடர் எஸ்தர் புத்தகத்தில் 7 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. அது அந்த இடத்தின் மதிப்பையும், அதில் உட்கார்ந்திருந்த மொர்தெகாயின் செல்வாக்கின் நிலைப்பாட்டையும் அறிவிக்கிறது.

**I. ராஜாவின் அரண்மனை வாசல் (Like a Court):** அது கூடார வாசலும் அல்ல; நகர வாசலும் அல்ல. அதில் வழிப்போக்கர்களும் வந்து செல்வதில்லை.

- அது ஜனங்களும், ராஜாவும் சந்திக்கும் இடம் (*Sign of Presence*)
- அது நற்செய்திகளும், துர்ச்செய்திகளும் கடந்து செல்லும் இடம் (*Sign of Proposition*)
- அது முடிவுகள் எடுக்கவும், அறிவிக்கவும் கூடிய இடம் (*Sign of Power*)

**II. மொர்தெகாயின் செல்வாக்கின் நிலைப்பாடு (Like an Advocate):**

- அவன் ராஜாவுக்கான ஜனங்களின் அணுகல் அதிகாரி (*Man of Approacher*).
- அவன் ராஜாவின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன் (*Man of well-wisher*):
- அவன் ராஜாவின் தீர்ப்புகளை ஜனங்களிடம் எடுத்துச் செல்பவன் (*Man of Ambassador*)

மொர்தெகாய் என்ற பெயருக்கு "*Warnor*" என்று பொருள். இவன் பென்யமீன் கோத்திரத்தான். எகொனியா காலத்தில் (2ஆம் சிறையிருப்பு) அடிமைப்பட்டவன். எஸ்தர் ராஜாத்தியின் வளர்ப்பு தகப்பன் (2:5, 6). இப்புத்தகம் முதலாவது மற்றும் இரண்டாவது எருசலேம் திரும்புதலுக்கு இடையேயான 80 ஆண்டு கால இடைவெளியில் நடந்த 10 வருடகால (கி.மு. 483 - கி.மு. 473 வரை) சம்பவங்களை விவரிக்கிறது. அடிமைத்தனத்தில் இருந்த யூத ஜனங்கள் கோரேஸ் ராஜாவால் (கி.மு. 539) சொந்த நாட்டிற்கு திரும்பும் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்பும், திரும்பி செல்வதற்கு விரும்பாமல் நெடுநாள் பழக்கத்தின் பலனாக விரும்பி அங்கேயே இருந்துவிட்டார்கள். அதன் விளைவு சுமார் 50 வருடத்திற்குப் பின்பு, யூத ஜனங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும் என்ற ஆகாகியனாகிய ஆமானின் விருப்பம், அகாஸ்வேரு ராஜாவால் கட்டளையாக்கப்பட்டது.

**யார் இந்த ஆமான்?**

சவுல் ராஜாவால் மடங்கடிக்காமல் விடப்பட்ட அமலேக்கியனாகிய ஆகாக் ராஜா வம்சத்தான் (1 சாமு. 15:32). வனாந்தரத்தில் இஸ்ரவேலர் வழிநடந்தபோது, வழிவிடாமல் அவர்களைத் தடுத்தபடியால், கடவுளின் கோபத்திற்கு ஆளானவர்கள் (உபா. 25:17-19). ஏசாவின் குமாரனாகிய எலிப்பாசின் குமாரன் (ஆதி. 36:12) இந்த அமலேக்கு. இத்தகைய பின்னணியத்தைக் கொண்ட ஆமானுக்கு, யூதர்களின் மீதான வெறுப்பு இயல்பேயாகும். யூதர்களைக் கொலைச்செய்ய பணம் கொடுத்து, ராஜாவைச் சட்டம் இயற்றக்கூறிய ஆமானின் தந்திரத்தில் (3:9-12) தீமையின் தீவிரத்தை அறிய முடியும். சூசான் நகரம் கலங்கிற்று (3:15). கலங்கி நின்ற தம் ஜனங்களின் மத்தியிலே, அவர்களைத் தப்புவிக்கும் போராளியாக களத்தில் இறங்கி செயல்பட்ட "மொர்தெகாயின் தப்புவிக்கும் ஊழியத்தை இக்கட்டுரையில் காண்போம்.

**I. நல்வாழ்வை உறுதிசெய்தல் (To ensure the good life):**

மொர்தெகாயின் வாழ்வு முழுவதுமே திரை மறைவிலிருந்து செயல்படும் கர்த்தர் மீதான அன்பு, விசுவாசம், நீதி உணர்வாக வெளிப்பட்டது. இப்பண்புகள் மற்றவர்கள் மீதான இரக்கம், கடமையுணர்வு, அக்கறை என்னும் பிம்பங்களாக செயல்பட்டது.

**i.எஸ்தரின் வாழ்வில் (To the Family):** தாய், தகப்பனில்லாத எஸ்தரை வளர்த்து அரண்மனைக்கு அனுப்பிய பிறகும் அவனுடைய கண்காணிப்பு தினமும் இருந்ததை (2:11) அறிய முடிகிறது.

**ii.ராஜாவின் வாழ்வில் (To the Foreman):** ராஜாவாகிய அகாஸ்வேருவின் மீது கைபோட பிக்தானும், தேரேசும் வர்மம் வைத்திருந்ததை (2:21) சரியான நேரத்தில் எச்சரிக்கை செய்து ராஜாவைக்

காப்பாற்றினான். இது அவனுடைய கண்ணும், கருத்துமான பணிவிடையை விவரிக்கிறது.

**iii.சொந்த ஜனங்களின் வாழ்வில் (To the Fellows):** யூதர்களுக்கு விரோதமான கட்டளையை அறிந்தபோது தன் துயரத்தின் சத்தத்தோடு விரைந்து செயல்பட்டான் (4:1, 2).

**II. நல்ல மதிப்புகளை கற்றுக் கொடுத்தல் (To educate the good values):**

மனிதனின் மதிப்புகள் மாறலாம். ஆனால் தேவனுடைய மதிப்புகள் மாறுவதில்லை. மதிப்புமிக்க தேவனை அறிந்து கொள்ளும்போது இயல்பாகவே மனிதன் மதிப்புடையவனாக மாற்றம் பெறுகிறான். மொர்தெகாய் பிரச்சனைகளின் மத்தியிலும் கர்த்தரின் மீதான நம்பிக்கை, துணிச்சல் மற்றும் வைராக்கியமாக செயல்பட்டு, கர்த்தரின் பிள்ளைகளின் தனித்துவத்தைக் கற்றுக் கொடுத்தான்.

**i. யூதன் என்ற அடையாளம் (To show the Identify):** "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (உபா. 6:13). இந்த தனித்துவமான அடையாளம் ஆமானை வணங்க மறுத்தது (3:4).

**ii. இரட்டு என்ற அடையாளம் (To draw the Formality):** "மனிதனால் கூடாதது தேவனால் கூடும்" (மத். 19:26). இஸ்ரவேலர்கள் தங்கள் இக்கட்டான நிலைமையில் தேவனுடைய இரக்கத்தைப் பெற இரட்டு அணிந்து கொள்வது வழக்கம். கடவுளே தஞ்சம் என்ற இத்தகைய முடிவை மொர்தெகாய் வெளிப்படுத்தினார் (4:1, 2).

**iii. இரட்சிப்பு என்ற அடையாளம் (To know the Assurity):** "கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன்" (2 நாளாகமம் 21:7) என்று கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தத்தில் மொர்தெகாய் கொண்டிருந்த நம்பிக்கை எஸ்தரிடத்தில் "நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்" (4:14) என்று எச்சரிக்கைச் செய்தது.

**III. நல்ல எதிர்காலத்தை வளப்படுத்துதல் (The enrich the good future):**

நல்ல தலைவனின் துணிவுமிக்க, ஞானமுள்ள செயல்பாடுகள் ஜனங்களுக்கு நல்ல எதிர்காலத்தை வலுவூட்டும். அது மகிழ்ச்சி, சமாதானம், ஒற்றுமை என்னும் கடவுளின் நன்மைகளாக செயலாக்கம் பெறும்.

**i. விடுதலை என்னும் பரிசு (Like a gift of Liberation):** யூதர்கள் கொல்லப்பட வேண்டும் என்று இயற்றப்பட்ட சட்டம் 11 மாத இடைவெளியில் (3:12, 13) மாற்றம் பெற்று, எதிரிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, விடுதலை வாழ்வு பரிசளிக்கப்பட்டது (9:1). அமலேக்கியர் முடிவுக்கு வந்தனர்.

**ii. மகிழ்ச்சி என்னும் பரிசு (Like a gift of Celebration):** "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்" (நெகே. 8:10). விடுதலை தந்த கர்த்தரை மகிழ்ச்சியோடு ஆராதிக்க "பூரிம் பண்டிகை" என்ற பரிசைப் பெற்றுக் கொண்டனர். மகிழ்ச்சியை மற்றவர்களோடும், எளியவர்களோடும் பகிர்ந்து கொண்டனர் (9:21, 22).

**iii. மகிமை என்னும் பரிசு (Like a gift of Adoration):** ராஜ சமூகத்தில் வந்த மொர்தெகாய் கர்த்தரால் செய்யப்பட்ட மகத்துவத்தை எதிர்கால சந்ததியார் நினைவில் கொள்ள இரண்டாந்தரமும் நிருபத்தை திடப்படுத்தும்படிக்கு மகா உறுதியாய் எழுதினான் (9:29). பூரிம் பண்டிகை வருஷந்தோறும் சரியான காலங்களில் ஆசரிக்கப்பட்டு யூதர்கள் தங்களை விடுதலையாக்கிய கடவுளை மகிமைப்படுத்துவதை பதிவுச் செய்தார்கள்.



அன்பு வாலிப பிள்ளைகளே! மொர்தெகாயின் விடுதலை முயற்சியில் கர்த்தரின் இறையாண்மை வெளிப்படும் தளமாக "அரண்மனை வாசல்" *(The King's Gate)* செயல்பட்டது. *Gate is the sympol of divine intervention.* மொர்தெகாயின் பதவியும் தற்செயலானது அல்ல; அது தெய்வீகமாக நியமிக்கப்பட்டது. *All professions are all about God's purposes.*

நரகத்தின் சித்தரிப்பை வரைந்த ஒரு இளம் கிறிஸ்தவ கலைஞர், தீப்பிழம்புகளின் நடுவே அவர் தன்னுடைய அன்புக்குரியவர்களின் முகங்களை வரைந்து, அதைப் போதகரிடம் சென்று காட்டினார். அவர் என்ன ஒரு அருவருப்பானஓவியம்? உன்னுடைய அருமையானவர்களின் முகங்களை இவ்வளவு கொடூரமான முறையில் எப்படி வரைய முடியும்? என்று கேட்ட போதகரிடம் கண்ணீருடன் பதிலளித்தார். ஆம், இது பயங்கரமானது. ஆனால், இது எனக்கு ஒரு நினைவூட்டலாக வரைந்தேன். அவர்களை நான் பரலோகத்தில் இழந்து விடாதபடிக்கு, என் கண்ணீரின் ஜெபத்தினால் தாங்க வேண்டும் என்பதற்காக என்றான். நம் அனைவரின் இதயச் சுவர்களிலும் இதுபோன்ற ஒரு படம் வரையப்பட வேண்டியது அவசியமல்லவா? நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து செயல்படுவோம்.

**"என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்". (எஸ்தர் 8:6)**

# ஏன் அநேகர் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கிறார்கள்?



கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில்

Mrs. Jeba Saral

"Hey, கொஞ்சம் நில்லுப்பா" என்று ஓடி வந்தான் ஒருவன். இவ்வாறு ஓடி வருவதைக் கண்ட மற்றொருவன் அவனைப் பார்த்து எதிர்கொண்டு ஓடிப் போக, அவன் "என்னய்யா, சுக செய்தியா?" என்று கேட்டான். அதற்கு ஓடி வந்தவன், ஒன்னும் இல்ல, எஜமான் மாற்று வஸ்திரத்தில் இரண்டும், ஒரு தாலந்து வெள்ளியும் வாங்கிட்டு வர சொன்னார்ன்னு சொன்னான். இப்போ உங்களுக்கு புரிஞ்சிருக்கும், நான் யாரைப் பற்றி கூற வருகிறேன் என்று. ஓடிவந்தவன் வேறு யாருமில்லை, எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி; சுக செய்தியா? என்று கேட்டவன் நாகமான். என்ன அக்கா, இந்த கதைக்கும், இந்த தலைப்பிற்கும் என்ன சம்பந்தம்?? என கேட்கிறீர்களா??? அதை அறிந்துகொள்ள தொடர்ந்து படியுங்கள்!! ஹலோ தம்பி தங்கச்சி, எல்லாரும் சந்தோஷமா இருக்கிறீர்களா? எங்கள் ஜெபங்களில் உங்களை நாங்கள் ஒருபோதும் தவறுவதில்லை.

சரி வாங்க, இந்த கேள்விக்குப் பதிலைக் காண்போம். 2 இரா. 5:1-27இல் எலிசா - தேவனுடைய மனுஷன்; நாகமான் - தன் குஷ்டரோகத்துக்காக சுகம் பெற வந்தவன். நல்லா கூர்ந்து கவனித்து பார்த்தீங்கன்னா, இந்த கேயாசியை போல தாங்க நாம இருக்கோம்!! தேவனுடைய சமூகத்தில் அல்லது தேவனுடைய பிள்ளைகள் இருக்கிற இடத்திலே ஒரு வேஷமான வாழ்க்கை; அங்கிருந்து வந்துட்டா "நான் வேற கேயாசி" யாக மாறிவிடுவேன், என்று இருக்கிறோம். நாகமான், எலிசாவை குறித்து என்ன நினைத்திருப்பான்? பாரேன், ஒரு காணிக்கை கூட வாங்க மாட்டேங்கிறாரு, என்ன மனுஷன்யா!! என்று. ஆனால், அதை பொய்யாக்குகிற விதமாக அமைகிறது கேயாசியின் செயல். இப்போது நாகமானின் எண்ணம் என்னவாக இருக்கும்? சற்று குழம்பித்தான் தன் ஊருக்கு சென்றிருப்பார். பல நேரங்களில், நாம் தேவனுடைய சன்னதியிலிருந்து வந்தவுடன் கேயாசியைப் போல தீவிரமாக, மாம்சத்தின் கிரியைகளை நிறைவேற்றி வருகிறோம். இதன் விளைவாகத்தான், கிறிஸ்தவர்கள் என்கிற கிறிஸ்துவை உடையவர்கள், பலவிதமான பொய்கள், கொள்ளைகள், கொலைகள், பாலியல் பாவங்கள், வட்டிகள், சண்டைகள், பிறர் பொருளை / இடங்களை அபகரித்தல், பிறர் கணவர் / மனைவியைப் பிரித்து, அவர்களை தங்கள் வசமாக்கிக் கொள்ளுதல், கணவன் மனைவி சண்டைகள், விவாகரத்துகள் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

சில சமயங்களில், தேவனுக்கு அடுத்ததாக கருதப்படும் தேவனுடைய ஊழியக்காரர்/ஊழியக்காரிகளும், தங்கள் சொந்த வாழ்க்கைகளில் சாட்சியை இழந்து காணப்படுகிறார்கள்!! இப்படி இருந்தால், உலகத்தில் பலவிதமான கஷ்டங்களோடும், தேவைகளோடும், நோய்களோடும் நாகமானைப் போல, நம்மைத் தேடி வருபவர்களுக்கு எப்படி சுகம், சமாதானம் கிடைக்கும்?? நிச்சயம் நீ அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். Ok, அது ஒரு புறம் இருக்க, பிறரைப் பற்றி யோசிக்காமல், இப்பொழுது நம்மை மாத்திரம் யோசித்துப்பார்போம். என் வாழ்க்கையினால் / செயலினால் தேவன் மகிமைப்படுகிறாரா?? என் வாழ்க்கையைப் பார்த்து, நீங்கள் தேவனுடைய மனுஷன் அல்லது மனுஷி என்றோ, பிள்ளை என்றோ சொல்லியிருக்கிறார்களா??? வாழ்வது ஒரு முறை. அந்த வாழ்க்கையை உனக்குப் பரிசாக தந்த தேவனின் பிள்ளையாய் இருந்துவிடு!! தினமும் "மறைவான குற்றங்களுக்கும், துணிகரமான பாவங்களுக்கும் உமது அடியானை விலக்கிக் காரும்" (சங் 19:12, 13) என்று ஜெபி!!

அநேகர் சொல்ல கேட்டிருக்கலாம், "கிறிஸ்துவை எனக்குப் பிடிக்கும்; ஆனால் கிறிஸ்தவர்களை அல்ல" என்று. அவர்கள் "பிடிக்கும்" என்ற நிலையிலிருந்து, "அவர்களது ரட்சகர்" என்ற நிலைக்கு வராமல் இருக்க கிறிஸ்தவர்கள் தான் காரணமாகி விட்டார்கள்!!!! அதனால் எலிசாவைப் போல, எந்த சூழ்நிலையிலும், தேவனுக்காக வைராக்கியம் பாராட்டி, உண்மையுள்ள கிறிஸ்தவர்களாய் வாழ்வோம்! உன் வாழ்க்கையைக் குறித்து, நீ உன் இறுதி நாட்களில், சந்தோஷமும், மனநிறைவும் அடைய வேண்டுமானால், இன்றைக்கே உன் வேஷங்களைக் களைந்து; உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ ஆரம்பித்து விடு. பலர் உன் வாழ்க்கையினால் இரட்சிக்கப்படுவார்கள்! கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள்!!! தேவன் உனக்கு அவ்விதமான கிருபைகளைத் தருவாராக. ஆமென்.

# டெல்லி

டெல்லி இந்தியாவின் இரண்டாம் மிகப்பெரிய நகரமாகும். வட இந்தியாவிலுள்ள யமுனை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்நகரம் மக்கள் குடியிருப்புப் பகுதியாக விளங்கி வருகின்றது. 1931ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி பிரிட்டிஷ் இந்தியாவின் தலைமை ஆளுநரான இர்வின் பிரபு அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட இம்மாநகருக்கு புது டெல்லி என பெயர் வைக்கப்பட்டு, இந்தியாவின் தலைநகரும் ஆனது. 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்தியா விடுதலை பெற்ற பின்னரும், இதுவே தலைநகராக இருந்தது. 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி டெல்லி தனி யூனியன் பிரதேசமானது.

உலகின் எட்டாவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நகரமாக டெல்லி விளங்குகிறது. இம்மாநிலத்தில் இந்தி மொழியுடன் உருது, பஞ்சாபி மற்றும் இந்திய மாநிலங்களின் கட்சி மொழிகளும் பேசப்படுகிறது. உலகின் மாநகரங்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் தொழில் துறை வளர்ச்சியிலும் உலக நாடுகளுக்கு நிகராக முன்னேறியுள்ளது. இங்கு 49% மக்கள் 860 குடிசைப் பகுதிகளில் உள்ள 4,20,000 குடிசைகளில் வாழ்கின்றனர்.

மேலைநாட்டு கலாச்சாரங்கள் இம்மாநிலத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. பல மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் இங்கு காணப்படுகின்றனர். 594 மிகப்பெரிய இந்துக் கோயில்கள் உட்பட்ட 665 பிரசித்தி பெற்ற வழிபாட்டுத்தலங்களும் உள்ளன. இது தவிர மசூதிகளும், குருத்வாராக்களும், 8 பிரசித்திப் பெற்ற தியான ஆசிரமங்களும் உள்ளன. அங்கு பலர் மன அமைதிக்காக தியானம் செய்ய சென்று வருகின்றனர். ராதா சுவாமி, நிரங்காரி போன்ற குருக்களை வணங்கி அவர்கள் போதனைகளைப் பின்பற்றும் இலட்சக்கணக்கான மக்களும் உள்ளனர்.

## நமது ஊழியம்:

1976ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் தேதி டெல்லியில் நமது ஊழியம் ஆரம்பிப்பதற்கென கள ஆய்வு செய்ய சுமார் ஒரு மாதம் திரு. லாசரஸ் அண்ணன் சென்றார்கள். கிழக்கு டெல்லி பகுதியில் குடிசைகளில் வாழும் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்கள். திரிலோக்புரி, கல்யாண்புரி ஆகிய பகுதிகளில் அநேகம் புலம்பெயர் தொழிலாளர்கள் குடியேறியிருந்தனர். 1976 ஆகஸ்ட் 15ஆம் தேதி டெல்லியிலுள்ள பட்பர்கஞ்ச் என்ற இடத்தை மையமாக வைத்து முதல் பணித்தளம் ஆரம்பிக்கப்பட்டது. ஊழியர்கள் திரு. லாசரஸ் & திருமதி. சந்திரா லாசரஸ், சகோதரிகள் டெய்சி, ஜெயசீலி மற்றும் பிளாரன்ஸ் ஆகியோர் முன்னோடி ஊழியர்களாகப் பணி செய்யச் சென்றனர்.

முதலாவது அங்குள்ள தமிழ் பேசும் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. திரிலோக்புரி, கல்யாண்புரி ஆகிய பகுதிகளில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வயது முதிர்ந்த பெண்கள் சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். 1978 செப்டம்பர் 24ஆம் தேதி முதல் திருமுழுக்கு ஆராதனை நடைபெற்றது. 16 பேர் கிறிஸ்துவை அறிக்கையிட்டு மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்தனர். இங்கு ஆராதனைக் குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு திரிலோக்புரியில் சிறிய நிலம் வாங்கப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது. 1983 மே 1ஆம் தேதி அந்த ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் 2016 நவம்பர் 26ஆம் தேதி அந்த ஆலயம் இடிக்கப்பட்டு மிஷனெரி தங்கும் இல்லத்துடன் மிகப்பெரிய ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## பணித்தளங்களின் ஆசீர்வாதங்கள்:

| | | | |
|---|---|---|---|
| ஊழியம் நடைபெறும் மாவட்டங்கள் | – 3 | பணித்தளங்கள் | – 1 (பட்பர்கஞ்ச்) |
| மிஷனெரி | – 1 குடும்பம் | மறுமலர்ச்சி பெற்றோர் | – 510 |
| சபைகள் | – 2 | கட்டப்பட்டுள்ள ஆலயம் | – 1 |
| சந்திக்கப்பட்டு வரும் மக்களினங்கள் | – 13 | | |

## ஜெபிக்க:

★ 860 குடிசைப் பகுதிகளிலுள்ள 4,20,000 குடிசைகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட, அவர்கள் வாழ்வாதாரம் மேம்பட

★ பாலியல் வன்முறை, போதை வஸ்துக்கள், கடத்தல் மற்றும் விற்பனை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் போன்ற சமுதாய சீர்கேடுகள் முற்றிலும் ஒழிக்கப்பட

★ தீவிரவாதிகளின் தாக்குதல், வெள்ளம், பூமி அதிர்ச்சி போன்ற இயற்கை சீற்றங்களினின்று இம்மக்கள் பாதுகாக்கப்பட

★ கிறிஸ்தவம் ஒரு அந்நிய நாட்டு மதம் என்றும், பொருளாதார உதவி செய்து மக்களைக் கவர்ந்திழுத்து மதமாற்றம் செய்கின்றனர் என்ற தவறான எண்ணங்களும் மக்கள் மத்தியிலிருந்து அகற்றப்பட


★ இங்கு காற்றிலுள்ள மாசு (Pollution) காரணமாக ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலவித நோய்களுக்கு உள்ளாகின்றனர். இது தடுக்கப்பட, அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்த

★ இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் சிலவற்றை எடுத்து, தங்கள் போதனைகளாகப் போதித்து, மக்களைத் தங்கள் பக்கம் இழுக்கும் குருக்களின் பிடியினின்று மக்கள் விடுபட்டு, இயேசுவே மெய்யான தேவன் என்பதை அறிந்து கொள்ள

★ இங்கு ஊழியம் செய்துவரும் நமது மிஷனெரிக் குடும்பத்தை (திரு. ஜாண் டேவிட்சன், திருமதி எஸ்தர்) தேவன் பாதுகாக்க, தொடர்ந்து வல்லமையாகப் பயன்படுத்த, நல்ல சுகத்தைக் கொடுக்க

★ இங்குள்ள 369 கிராமங்களும் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட, 2 கோடி மக்களும் கிறிஸ்துவை மெய்த் தெய்வமாக ஏற்றுக்கொள்ள

★ இங்கு ஊழியம் செய்ய 2 சுதேச ஊழியர் குடும்பங்கள் கிடைக்க, 60 இடங்களில் இரவு கூட்டங்கள் நடத்தப்பட, 24 இடங்களில் சத்சங் கூடுகைகள் நடத்தப்பட, 4 சபைகள் எழும்ப ஜெபிப்போம்.



FIELD - FMPB

Mrs. Vasanthi Emmanuel

Ms. Beulah Baskar

# பாலும் தேனும் ஓடும் தேசம் – இஸ்ரேல்

‘பாலும் தேனும் ஓடுகிற தேசம்’ என்ற சொற்றொடர் பொதுவாக இஸ்ரேலைக் குறிக்கிறது. இது வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வேதாகம சொல். இது மிகுதியும், செழிப்பும் நிறைந்த இடமாகும். இந்த சொற்றொடர் தோராவில் (பழைய ஏற்பாடு) அடிக்கடி காணப்படுகிறது. மேலும் கானான் தேசத்துடன் தொடர்புடையது. இது தோராயமாக நவீன இஸ்ரேலின் இருப்பிடமாகும். “பால் மற்றும் தேனின் நிலம்’ என்ற சொற்றொடர் விவசாய செழுமையை விவரிப்பதை விட, இன்னும் பல காரியங்களை உள்ளடக்கியதாகும்.

**வேதாகம முக்கியத்துவம்:** எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறும் இஸ்ரவேலர்களுக்கு பாலும், தேனும் ஓடுகின்ற ஒரு தேசத்தைக் கடவுள் யாத்திராகம புத்தகத்தில் வாக்களித்தார்.

**மிகுதியின் சின்னம்:** ‘பால்’ என்பது பெரும்பாலும் ஆட்டுப்பாலைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. அதே நேரத்தில் “தேன்” என்பது பேரீச்சம்பழத்திலிருந்து தயாரிக்கப்படும் பேரீச்சம்பழ சிரப்புடன் (சிலான்) இணைக்கப்பட்டுள்ளது. பேரீச்சம்பழம் இஸ்ரேலை பூர்வீகமாகக் கொண்ட ஏழு வகை விளைபொருட்களில் ஒன்றாகும்.

இஸ்ரேல் அண்டை அரபு நாடுகளுடன் குறைந்தது அரை டஜன் போர்களை நடத்தியுள்ளது. அவற்றில் 1948இல் அரபு-இஸ்ரேலியப் போர், 1956இல் சூயஸ் நெருக்கடி, 1967இல் ஆறு நாள் போர், 1973இல் யோம் கிப்பூர் போர், 1982இல் லெபனான் போர் மற்றும் 2006இல் லெபனான் போர் மற்றும் தற்போதைய காசா போர் ஆகியவை அடங்கும்.

2022ஆம் ஆண்டின் நிலவரப்படி இஸ்ரேலிய மக்கள் தொகையின் மத சார்பு 73.6% யூதர்கள், 18.1% முஸ்லீம்கள், 1.9% கிறிஸ்தவர்கள் மற்றும் 1.6% ட்ரூஸ் ஆகும். மீதமுள்ள 4.8% சமாரியனிசம் மற்றும் பஹாய் போன்ற நம்பிக்கைகளையும், “மத ரீதியாக வகைப்படுத்தப்படாதவை” என்பதையும் உள்ளடக்கியது

**ஜெபக்குறிப்புகள்:**

- ✦ தேவன் தாமே மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியைக் கொண்டு வரவும், போரின் பாதிப்புகளால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க,
- ✦ இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள மக்கள், குழந்தைகள், பெண்கள் அனைவரும் தேவனால் பாதுகாக்கப்பட,
- ✦ எல்லைகளைப் பாதுகாக்கும் இராணுவ வீரர்கள் மற்றும் மருத்துவ குழுக்களுக்கு ஞானத்தையும், தைரியத்தையும் தேவன் அருள,
- ✦ இரு நாடுகளின் தலைவர்கள் சமாதானத்திற்கான வழியைத் தேடவும், பதிலடி கொடுப்பதைத் தவிர்த்து, ஞானத்துடன் முடிவெடுக்க,
- ✦ இஸ்ரேல், ஈரான் மற்றும் பிற நாடுகளின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பிற அரசியல் தலைவர்களின் ஞானத்திற்காக,
- ✦ இறுதி கால தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தையும், அவரது இரண்டாவது வருகையையும், நாம் நெருங்கும்போது, இயேசுவை தங்கள் இரட்சகராகப் பெற இஸ்ரேலியர்கள் மற்றும் அனைத்து நாட்டு மக்களின் கண்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.





# REV. P. டேவிட்

### எளிமையான ஆரம்பம்

நான் 1970ஆம் ஆண்டு கௌடிபுரம் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தேன். இந்த கிராமம், எனது மூதாதையர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள திருத்தணியிலிருந்து வந்த கௌடி என்ற மிஷனெரியின் பெயரால் அழைக்கப்பட்டது. காலப்போக்கில், அவரது நினைவாக இந்த கிராமம் கௌடிபுரம் என்று அழைக்கப்பட்டது. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்தவ முறையில் வளர்க்கப்பட்டேன்.

### கல்வி

எனது 10ஆம் வகுப்பு வரை அருகிலுள்ள பாண்டேஸ்வரம் கிராமத்தில் முடித்தேன். எனது மேல்நிலைப் படிப்பை திருத்தணிக்கு அருகிலுள்ள வள்ளியூர் அரசுப் பள்ளியில் பயின்றேன். பின்னர், 1987-1990ஆம் ஆண்டுகளில் பட்டாபிராமில் உள்ள டி.ஆர்.பி.சி.சி.சி இந்து கல்லூரியில் கார்ப்பரேட் செகரட்டரிஷிப்பில் (Corporate Secretaryship) இளங்கலைப் பட்டம் பெற்றேன்.

### இரட்சிப்பின் அனுபவம்

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்ட போதிலும், 1985ஆம் ஆண்டில், எனது மாமா (ஒரு போதகர்) நடத்திய இரவு ஜெபக் கூட்டத்தில் நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது தேவனை முகமுகமாய் சந்தித்தேன். அன்று இரவு இரண்டு முக்கியமான விஷயங்கள் நடந்தன:

1. இயேசுவுடன் ஒரு ஆழமான நட்பை உணர்ந்தேன், மேலும் எனது எண்ணங்கள் மற்றும் செயல்களிலுள்ள தவறுகள் பாவங்கள் என உணர்த்தப்பட்டேன். நான் மனதார மனந்திரும்பி என் பாவங்களை அறிக்கையிட்டேன்.
2. நான் மிகவும் கஷ்டப்பட்டு வந்த திக்குவாய்ப் பிரச்சினை அற்புதமாக குணமடைந்தது.

### ஊழியத்திற்கான அழைப்பு

எனது இரட்சிப்பு மற்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குப் பிறகு, நான் சக சபை உறுப்பினர்களுடன் அருகிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். நான் சமூக சேவையிலும் தீவிரமாக ஈடுபட்டேன். இறுதியில், என்னிடம், “நீ ஒரு சிறிய சமூகத்திற்குள் வேலை செய்ய விரும்புகிறாயா? அல்லது ஒரு பெரிய சமூகத்திற்கு கடவுளின் ஊழியராக சேவை செய்ய விரும்புகிறாயா?” என்று கேட்டதாக உணர்ந்தேன். நான் கடவுளின் ஊழியனாக சேவை செய்வதையே தெரிந்தெடுத்தேன். பின்னர் எனது தாயார், நான் குழந்தை இல்லாமல் ஆறு ஆண்டுகள் கஷ்டப்பட்டேன். அப்போது எனக்கு குழந்தைப் பிறந்தால் நான் கடவுளின் ஊழியத்திற்காக குழந்தையை அர்ப்பணிப்பேன் என்று பொருத்தனைப் பண்ணினதாக என்னிடம் பகிர்ந்துக் கொண்டார்கள்.

1991ஆம் ஆண்டில், நான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் (FMPB) இணைந்தேன். 1991ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி சேலத்தில் உள்ள பெத்தேல் பைபிள் இன்ஸ்டிடியூட்டிற்கு (Bethel Bible Institute) அனுப்பப்பட்டேன்.

### பஞ்சாபில் மிஷனெரிப்பணி

1992ஆம் ஆண்டில், நான் மூத்த மிஷனெரியான திரு. ஜான் பாலசிங்குடன் சேர்ந்து பஞ்சாபில் ஒரு முன்னோடி மிஷனெரியாக இணைந்தேன். ஆரம்ப நாட்கள் எனக்கு மிகவும் சவாலானதாக இருந்தபோதிலும், படிப்படியாக பஞ்சாபி மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளையும் கற்றுக்கொண்டேன். மேலும் அவர்கள் மொழியிலேயே பிரசங்கிக்கவும் ஆரம்பித்தேன்.

### திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை

1994ஆம் ஆண்டில், நான் எலிசபெத் ராணியை மணந்தேன், இவர் 1989ஆம் ஆண்டில் FMPBஇல் சேர்ந்து டெல்லி, பட்பர்கஞ்ச் பணித்தளத்தில் பணிபுரிந்தார். எங்களுக்கு சுனோதி, ஜீவா பெனியேல் என்ற 2 பிள்ளைகள் உள்ளனர்.

### பஞ்சாபில் ஊழியம்

நாங்கள் இருவரும் சேர்ந்து பஞ்சாபில் எங்கள் ஊழியத்தைத் தொடர்ந்தோம். இங்கு ஊழியம் சார்ந்த பஞ்சாப் டுமாரோ (1995-2000), அப்னா பஞ்சாப் (2000-2015) என்ற 2 திட்டங்களை நாங்கள் தொடங்கினோம். இந்த திட்டங்கள் பஞ்சாப் முழுவதும் ஆயிரக்கணக்கானோரை நாங்கள் சென்றடைய எங்களுக்கு உதவியது. கடவுளின் கிருபையால், மஜ்பி சீக்கியர்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க மக்கள் இயக்கம் தொடங்கியது. பல ஆண்டுகளாக, 1,82,000 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர், 48 சபைகள் நிறுவப்பட்டன, 412 சபைக் கூட்டங்கள் உருவாக்கப்பட்டன மற்றும் 66 உள்ளூர் சுவிசேஷகர்கள் எழுப்பப்பட்டனர். நாங்கள் 10 மிஷனெரி பணித்தளங்களை நிறுவவும் உதவினோம். பஞ்சாபில் எங்களின் 23 ஆண்டுகால ஊழியத்தில் ஜீப் குழு உறுப்பினர், பகுதிச் செயலாளர் (புத்லாடா), பிராந்தியச் செயலாளர் (பஞ்சாப் பிராந்தியம்), மண்டலச் செயலாளர் (வடக்கு மண்டலம்) போன்ற பல தலைமைப் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த ஊழியத்திற்கு பிறகு, எதிர்கால சேவைக்காக என்னை மேலும் தயார்படுத்திக் கொள்ள 2013ஆம் ஆண்டு முதல் 2017 வரை பூனேவிலுள்ள யூனியன் பைபிளிகல் செமினரியில் (Union Biblical Seminary) இணைந்து இறையியல் கல்வி பயின்றேன்.

### தென் இந்தியாவில் மிஷனெரி பணி

எனது B.D. படிப்பை முடித்த பிறகு, வேலூர் முன்னேற்றப்பணி பிராந்தியத்தின் (வேலூர், ராணிப்பேட்டை, மற்றும் ஆம்பூர் உள்ளடக்கியது) பிராந்தியச் செயலாளராக நியமிக்கப்பட்டேன். புதுச்சேரி பிராந்தியத்திற்கும் (விழுப்புரம், திண்டிவனம், நெய்வேலி, மற்றும் கடலூர் உள்ளடக்கியது) கூடுதல் பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டது. செப்டம்பர் 2022இல், நாங்கள் கோயம்புத்தூரில் ஊழியத்தில் சேர்ந்தோம், அங்கு நாங்கள் இன்று வரை ஊழியம் செய்து வருகிறோம்.


### ஜெபக்குறிப்பு:

- எனது மனைவி எலும்பு பலவீனம் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக, குறிப்பாக அவர்களின் குடும்ப வாழ்க்கைக்காக ஜெபியுங்கள்.
- எல்லாவற்றிற்கும் மேலாக, எங்கள் ஊழியப் பயணம் தொடர்ந்து பலனைத் தரவும், நாங்கள் எங்கள் ஓட்டத்தை சமாதானத்துடன் முடிக்கவும் ஜெபியுங்கள்.

Rev. T.Y.P. Asir

FMPB MISSIONARY - AFTER FIELD - TN PROMOTION

# தலசீமியா (THALASSEMIA) மற்றும் ஹீமோபிலியா (HEMOPHILIA)

| | தலசீமியா (THALASSEMIA) | ஹீமோபிலியா (HEMOPHILIA) |
|---|---|---|
| **அது என்ன?** | இது ஒரு மரபணு பாதிப்பினால் வரும் இரத்தக் கோளாறாகும். இதில் உடல் போதுமான ஹீமோகுளோபினை உற்பத்தி செய்வதில்லை. | இது ஒரு மரபணு பாதிப்பினால் வரும் இரத்தப்போக்குக் கோளாறாகும். இதில் இரத்த உறைவு காரணிகள் இல்லாததால் இரத்தம் சரியாக உறையாது. |
| **காரணங்கள்** | ஹீமோகுளோபின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களில் பாதிப்பு. | X குரோமோசோமில் பாதிப்பு (பெரும்பாலும் ஆண்களைப் பாதிக்கிறது). |
| **வகைகள்** | ▸ ஆல்ஃபா தலசீமியா - ஆல்ஃபா-குளோபின் சங்கிலியில் குறைபாடு.<br>▸ பீட்டா தலசீமியா - பீட்டா-குளோபின் சங்கிலியில் குறைபாடு. | ▸ ஹீமோபிலியா A - இரத்த உறைவு காரணி VIII குறைபாடு.<br>▸ ஹீமோபிலியா B - இரத்த உறைவு காரணி IX குறைபாடு. |
| **அறிகுறிகள்** | இரத்த சோகை (சோர்வு, பலவீனம், வெளிறிய தோல்), குழந்தைகளில் மெதுவான வளர்ச்சி, மண்ணீரல் விரிவாக்கம், எலும்பு குறைபாடுகள், கடுமையான சந்தர்ப்பங்களில் வழக்கமான இரத்த மாற்று தேவைப்படலாம். | வெட்டுக்கள் அல்லது காயங்களிலிருந்து அதிகப்படியான இரத்தப்போக்கு, மூக்கில் இரத்தக் கசிவு, எளிதில் சிராய்ப்பு ஏற்படுதல், உள் இரத்தப்போக்கு (மூட்டுகள் மற்றும் தசைகளில், வலி, வீக்கம், சேதத்தை ஏற்படுத்துகிறது). |
| **சிகிச்சை** | ▸ இரத்த மாற்று - இது ஒரு மருத்துவ செயல்முறை, இதில் ஒரு நோயாளி ஒரு நரம்பு வழியாக இரத்தம் அல்லது இரத்தக் கூறுகளைப் பெறுகிறார்.<br>▸ இரும்பு நீக்க சிகிச்சை (இரத்தத்திலுள்ள அதிகப்படியான இரும்பை அகற்ற).<br>▸ எலும்பு மஜ்ஜை மாற்று (கடுமையான சந்தர்ப்பங்களில்). | ▸ மாற்று சிகிச்சை (காணாமல் போன இரத்த உறைவு காரணிகளை உட்செலுத்துதல்).<br>▸ தடுப்பு (முற்காப்பு) சிகிச்சை.<br>▸ காயம் மற்றும் சில மருந்துகளை (ஆஸ்பிரின் போன்றவை) தவிர்ப்பது. |
| **அறிகுறிகள்** | இந்தியா "உலகின் தலசீமியா தலைநகரம்" என்று கருதப்படுகிறது. 3-4% மக்கள் -தலசீமியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் தலசீமியா மேஜர் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,00,000-1,50,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சாபில் 2025இல் 257 தலசீமியா நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் (87 பேர் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள்). இதனால் ஜூலை 22 நிலவரப்படி, இந்தியாவின் மொத்த (4,361) வழக்குகளில் கிட்டத்தட்ட 6% மாநிலம் கொண்டுள்ளது. குஜராத்தில் உலக தலசீமியா தினத்தன்று, இலவச பரிசோதனையின் கீழ் 1.55 மில்லியன் மக்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆண்டுக்கு சராசரியாக 18,517 பரிசோதனைகள் நடத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. நாக்பூரில், 1,34,408 நபர்களுக்கு நடத்தப்பட்ட ஒரு பெரிய பரிசோதனையில், 216 தலசீமியா வழக்குகள் உறுதி செய்யப்பட்டன. | ஹீமோபிலியா A நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 1,36,000 நபர்களுடன், உலகளவில் ஹீமோபிலியா வழக்குகளின் இரண்டாவது பெரிய எண்ணிக்கையை இந்தியா கொண்டுள்ளது. சுமார் 21,000 நோயாளிகள் மட்டுமே அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட 80% பேர் இன்னும் கண்டறியப்படாமல் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது. 2019 பதிவேட்டில் இந்தியாவில் சுமார் 21,824 இரத்தப்போக்கு கோளாறு நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஹீமோபிலியா A நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 17,606 பேரும், ஹீமோபிலியா B நோயால் பாதிக்கப்பட்ட 2,715 பேரும் அடங்குவர். முக்கியமாக இன்ட்ராகிரேனியல் இரத்தப்போக்கு (42.9%), அதைத் தொடர்ந்து விபத்துக்கள்/ காயம் (25.9%) மற்றும் இரைப்பை குடல் இரத்தப்போக்கு (15.9%) ஆகியவற்றால் இறப்பு ஏற்பட்டது. |
| **ஜெபக் குறிப்புகள்** | 1. இந்நோயிலிருந்தும், வலியிலிருந்தும் இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க<br>2. நோய்த்தொற்றுகளிலிருந்து பாதுகாப்பு மற்றும் இரும்பு நீக்க சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் கிடைக்க<br>3. பதட்டம் மற்றும் மனச்சோர்வு நீங்க<br>4. சிகிச்சையின் அதிக செலவுகளால் போராடும் குடும்பங்களுக்கு அரசாங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஆதரவு கிடைக்க<br>5. பராமரிப்பாளர்கள் மற்றும் பெற்றோர்கள் பொறுமை, ஞானம் பெற்று கடவுளின் அன்பு, மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையை அனுபவிக்க ஜெபியுங்கள். | 1. உயிருக்கு ஆபத்தான காயங்கள், வீழ்ச்சிகள் அல்லது உள் இரத்தப்போக்கிலிருந்து அவர்களைக் காக்க<br>2. மருந்துகள் மற்றும் சிகிச்சைகள் விலை குறைவாக கிடைக்க<br>3. சேதமடைந்த மூட்டுகள் குணமாக, நாள்பட்ட வலியிலிருந்து நிவாரணம் கிடைக்க<br>4. அரசாங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மற்றும் திருச்சபைகள் இந்த நோயாளிகளுக்கு ஆதரவு கொடுக்க, சமுதாயம் இவர்களை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். |



# மாடியா கோண்ட்

Mr. Suriya Kumar



இந்தியாவின் மிகப்பெரிய மக்கள் இனமான 'கோண்ட்' இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றுதான் "மாடியா கோண்ட்". இவர்கள் மஹாராஷ்டிராவில் கட்சிரோலி மாவட்டத்திலும், சத்தீஸ்கரில் தண்டேவாடா, கான்கேர், பிஜாபூர், நாராயண்பூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 10 தாலுகாகளிலும் வசித்து வருகின்றனர். இவர்களின் மொத்த ஜனத்தொகை சுமார் 17 இலட்சம். திராவிட இனமான இவர்கள் பேசும் மொழி மாடியா என்றழைக்கப்படுகிறது. மற்ற இன மக்களோடு இணைந்து வாழாமல் அடர்ந்த காட்டுப்பகுதியில் உள்ள கிராமங்களில் தனித்து வசித்து வருகின்றனர். நெல் பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். தண்ணீர் வசதி இல்லாததால், விளைச்சலுக்கு மழையை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அரிசி, குளங்களில் பிடித்து வரும் மீன்கள், காடுகளில் உள்ள பச்சை இலைக்காய்கறிகள், வேட்டையாடும் மிருகங்கள் ஆகியவையே இவர்களது உணவாகும். "கல்தெய்வம்" என அர்த்தங்கொள்ளும் "பண்டாபேன்" என்ற தெய்வத்தையும், "மூதாதையர்களின் ஆவி" என்று அர்த்தங்கொள்ளும் "சூனால்பேனையும்" குடும்ப தெய்வமாக வழிபடுகின்றனர். "போச்சா" அவர்களின் கிராமக்கடவுள். பொதுவாக எல்லாவற்றிற்கும் மந்திரவாதிகளையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். பொறாமையினால் ஏற்படும் விரோதங்களைத் தீர்க்க மந்திர சக்திகளை ஏவிவிடுவது இவர்களது வழக்கம்.

குடிப்பழக்கம், இளவயது திருமணம், திருமணத்திற்கு முன்பு பாலுறவு ஆகியவை இவர்களிடம் காணப்படும் தீய கலாச்சாரமாகும். நல்ல விளைச்சலுக்காக, தீராத வியாதியிலிருந்து விடுபட நரபலி செலுத்துவது இன்றும் இவர்கள் மத்தியில் காணப்படுகிறது. எனவே மற்ற வெளி நபர்கள் இங்கு தங்குவது பாதுகாப்பற்றதாகும்.

சமுதாய கட்டுப்பாடு இம்மக்களினத்தில் மிகக் கடுமையாக உள்ளது. கயத்தால் (பட்டேல்) என்று அழைக்கப்படும் கிராமத்தலைவர் "பூமியால்" என்று அழைக்கப்படும் பூசாரி. இவர்களின் கட்டுப்பாட்டில் தான் கிராமங்கள் இருக்கின்றன. தனிப்பட்ட நபர்கள் தாங்களாகவே எந்த தீர்மானமும் எடுக்க உரிமை இல்லை. சிறு பிள்ளைகளின் தகப்பன் இறந்து விட்டால், தாய் பிள்ளைகளை இறந்த கணவரின் வீட்டில் விட்டுவிட்டு, வேறொருவரைத் திருமணம் செய்து கொள்கின்றனர். தனித்து விடப்பட்ட ஆண்பிள்ளைகள் "மூரா" என்றும் பெண் பிள்ளைகள் "மூரி" என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மண்ணும், மரமும், தண்ணீரும் எங்களுடையது என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நக்சல்வாதிகளின் நடமாட்டம் இங்கு அதிகம். அரசாங்கத்திற்கும், இவர்களுக்கும் அடிக்கடி சண்டை நடப்பதால் எந்த வளர்ச்சியும் பெற வாய்ப்பில்லாத பின்தங்கிய பகுதியாகவே இப்பகுதி காணப்படுகிறது. அடிப்படை சாலை வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் இவர்களின் கண்ணுக்கெட்டா தொலைவில் இருக்கிறது. மூளைக்காய்ச்சல், சிக்கிள் செல் அனீமியா, டைபாய்டு போன்ற நோய்களால் இவர்கள் அடிக்கடி பாதிக்கப்பட்டு மரணத்தைச் சந்திக்கின்றனர்.

### FMPB ஊழியங்கள்:

இங்கு நமது ஊழியம் 1996இல் ஆரம்பிக்கபட்டு, தவிர்க்க முடியாத காரணத்தால் மூடப்பட்டது. 2001இல் மீண்டும் ஆரம்பிக்கபட்டு இன்று சுமார் 1500 விசுவாசிகள் மற்றும் 23 ஆராதனை குழுக்களோடு 7 ஆலயங்களில் கர்த்தரை ஆராதித்து வருகின்றனர்.

### ஜெபியுங்கள்:

- நரபலி மாறி கிறிஸ்துவின் கிருபாதார பலியை அறிய…
- நக்சல்வாதிகளின் திட்டங்களுக்கு ஊழியர்களைத் தேவன் பாதுகாக்க…
- சிக்கிள் செல் அனீமியா என்ற பரம்பரை இரத்த வியாதியிலிருந்து ஜனங்களைத் தேவன் பாதுகாக்க…
- PESA என்ற சட்டம் மற்றும் சமுதாயத் தலைவர்கள் மூலம் உண்டாகும் எதிர்ப்பு மாற ஜெபியுங்கள்.

Ms. Lily Reaiah Grace

வலைக்குள் சிக்காதே

# காப்பீட்டு மோசடிகள்

விபத்துகள் மற்றும் உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தி தவறான முறையில் காப்பீட்டுப் பணத்தைப் பெறும் மோசடிகளைத் தவிர, இந்தியாவில் பல வகையான காப்பீட்டு மோசடிகள் பரவலாக உள்ளன.

சமீபத்தில் இந்தியாவில் ஒரு பெரிய காப்பீட்டு மோசடி வெளிச்சத்துக்கு வந்தது, இது காப்பீட்டு அமைப்பின் பாதிப்பை அம்பலப்படுத்தியது. உத்திரப்பிரதேசம், டெல்லி, ஜார்கண்ட், வங்காளம், அசாம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், பீகார், உத்தரகாண்ட் மற்றும் ஹரியானா உட்பட 12 மாநிலங்களில் பரவியுள்ள இந்த மோசடியில், மோசடி செய்பவர்கள், நோய்வாய்ப்பட்ட தனிநபர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயரில் கூட காப்பீடு செய்து, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள பணத்தைப் பெற ஆவணங்களைக் கையாண்டனர். மேலும் இவர்கள் நிதி ஆலோசகர்களாக நடித்து, மோசமாக நோய்வாய்ப்பட்ட தனிநபர்களின் குடும்பங்களை குறிவைத்து, பல வாக்குறுதிகளுடன் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை வாங்கும்படி அவர்களை நம்பவைப்பர். அவர்கள் சில சமயங்களில், கூடுதல் வசதிகளுக்காக மக்கள் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகையை, தாங்களே செலுத்திவிட்டு, அந்த நபர் இறந்த பிறகு காப்பீட்டுப் பணத்தைப் பெறுவார்கள். இறுதியாக, அவர்களுடைய காப்பீட்டு தொகையில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு, மீதமுள்ள தொகையை கொள்ளையடித்து விடுவார்கள். சில சந்தர்ப்பங்களில், மோசடி செய்பவர்கள் ஏற்கனவே இறந்த நபர்களின் திருடப்பட்ட வங்கி விவரங்களைப் பயன்படுத்தி, உள்ளூர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, அவர்களுடன் கூட்டு சேர்ந்து, மரண சான்றிதழ்களைப் போலியாக தயாரித்து, மோசடியான பாலிசி ஆவணங்களை உருவாக்குவார்கள்.

இந்த மோசடி, காப்பீட்டு அமைப்பின் பலவீனங்களை எடுத்துக்காட்டியுள்ளது. குறிப்பாக பிரதம மந்திரி ஜீவன் ஜோதி யோஜனா போன்ற அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் திட்டங்களில், பணத்தைப் பெறுவதற்கு மரண சான்றிதழ் மட்டுமே போதுமானதாக உள்ளது. விசாரணையில், 80% வழக்குகளில் காப்பீட்டுத் தொகை உண்மையான உரிமையாளரை சென்றடையவில்லை என்றும், பல பயனாளிகளுக்கு தங்கள் பெயரில் எந்தவொரு காப்பீடும் கோரப்பட்டது தெரியவில்லை என்றும் தெரியவந்தது. காப்பீட்டு மோசடிகளுக்கு பலியாகாமல் இருக்க உதவும் 5 வழிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

### காப்பீட்டு மோசடிகளைத் தவிர்க்கும் வழிமுறைகள்:

1. முகவரின் சான்றுகளைச் சரிபார்க்கவும். அதாவது காப்பீட்டு முகவர் அல்லது தரகர், காப்பீட்டுப் பாலிசிகளை விற்க உரிமம் பெற்றவரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களின் சான்றுகளைச் சரிபார்க்க நீங்கள் காப்பீட்டு நிறுவனம் அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளை அணுகலாம்.

2. கேட்கப்படாத சலுகைகளில் கவனமாக இருங்கள். அதிக வருமானத்தையோ அல்லது உத்தரவாதமான பலன்களையோ உறுதியளிக்கும் முகவர்கள் அல்லது தரகர்களிடமிருந்து கேட்கப்படாத சலுகைகள் அல்லது அணுகுமுறைகள் குறித்து கவனமாக இருங்கள். முறையான காப்பீட்டு நிறுவனங்கள் பொதுவாக வாடிக்கையாளர்களைத் தற்செயலாக அணுகுவதில்லை.

3. பாலிசி ஆவணங்களைப் படித்து புரிந்து கொள்ளுங்கள். கையெழுத்திடுவதற்கு முன், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட பாலிசி ஆவணங்களை கவனமாகப் படித்துப் புரிந்துகொள்ளுங்கள். எது உள்ளடக்கப்பட்டுள்ளது, எது இல்லை மற்றும் காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன என்பதை நீங்கள் அறிந்துக் கொள்ளுங்கள்.

4. ஆபத்துகளைப் பற்றி அறிந்திருங்கள். பின்வரும் முகவர்கள் அல்லது தரகர்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்:

- சிந்திக்க அல்லது மற்றவர்களுடன் கலந்தாலோசிக்க உங்களுக்கு நேரம் கொடுக்காமல், விரைவாக முடிவெடுக்குமாறு உங்களை வற்புறுத்துபவர்கள்.
- அசாதாரணமான அதிக வருமானம் அல்லது உத்தரவாதமான பலன்களை உறுதியளிப்பவர்கள்.
- பிரீமியங்களை ரொக்கமாக அல்லது வழக்கத்திற்கு மாறான வழிகளில் செலுத்துமாறு உங்களிடம் கேட்பவர்கள்.

5. நீங்கள் ஒரு காப்பீட்டு மோசடியால் குறிவைக்கப்படுவதாக சந்தேகித்தால், உடனடியாக காப்பீட்டு நிறுவனம், ஒழுங்குமுறை அதிகாரிகள், இணையக் குற்றத்துறை அல்லது சட்ட அமலாக்க நிறுவனங்களுக்குப் புகாரளியுங்கள்.

### ஜெபக்குறிப்புகள்:

✦ பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்: இந்த மோசடியினால் பணரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்கள் இழந்ததை மீட்டுக் கொள்ள, அவர்களுக்கு நீதி கிடைக்க

✦ நேர்மைக்காக ஜெபிப்போம்: விசாரணையில் ஈடுபட்டுள்ள காப்பீட்டு நிறுவனங்களும், அரசு அதிகாரிகளும் தங்கள் நடவடிக்கைகளில் நேர்மையையும், வெளிப்படைத்தன்மையையும் நிலைநிறுத்த

✦ பாதுகாப்புக்காக ஜெபிப்போம்: இந்த மோசடி செய்பவர்களால் குறிவைக்கப்பட்டு பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக

✦ ஞானத்திற்காக ஜெபிப்போம்: இந்த மோசடியை விசாரிக்கும் அதிகாரிகள், ஞானத்துடனும், விவேகத்துடனும் செயல்பட்டு மோசடியில் ஈடுபட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய அனைவரையும் அடையாளம் கண்டு நீதியின் முன் நிறுத்த

✦ பொறுப்பிற்காக ஜெபிப்போம்: மோசடியில் ஈடுபட்டவர்கள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்கவும், எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடிகளைத் தடுக்க காப்பீட்டு முறையை சீர்திருத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஜெபிப்போம்.



# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

# கக்கதாசம் திருச்சபை வரலாறு



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியமானது இயற்கை எழில் கொஞ்சும் மலை சார்ந்த பகுதிகளில் அற்பமாய் ஆரம்பமானது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒருமுறையேனும் அறிந்திடாதோர் மத்தியிலே அவரை அறிவிக்க சித்தம் கொண்டது. உன்னத தேவனின் இருதய வாஞ்சையை சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொண்டு, அதை நிறைவேற்ற துடித்து, அமர்க்களமில்லாமல் பயணப்பட்ட அந்த “அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? சகரியா 4:10.

நற்செய்திப் பணியை பெரியமலை மற்றும் மலையடிவார கிராமங்களைக் கடந்து, தன் சுவிசேஷப் பணியைத் தொய்வில்லாமல் செய்ததின் விளைவாக சுவிசேஷ விதை விதைக்கப்பட்ட கிராமங்கள்தோறும் திருச்சபைகள் மலர்ந்தன. அப்படி 1993ஆம் ஆண்டு மலர்ந்த திருச்சபைகளில் ஒன்று தான் கக்கதாசம் திருச்சபை.

நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிகள் மற்றும் சுதேச மிஷனெரிகள் அப்பகுதிகளில் கால் பதித்து இயேசு கிறிஸ்துவின் திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் தெரு பிரசங்கங்களின் மூலமாக நற்செய்தியை அறிவித்தனர். அப்போது அந்தப் பகுதியில் கற்றாழை வெட்டுவதற்காக காட்டிற்குள் சென்ற திருமதி. முனிநஞ்சம்மா என்பவரை அடையாளம் தெரியாத விஷப்பூச்சி தீண்டியதால் அவரது சரீரத்தில் குஷ்டரோகம் போன்ற வியாதிக் கண்டு, அவரின் விரல்கள் அழுக ஆரம்பித்தன. அவைகளிலிருந்து இரத்தமும், சீழும் வந்துக்கொண்டே இருந்தது.

மருத்துவர்கள் மற்றும் மந்திரவாதிகளால் கைவிடப்பட்ட திருமதி. முனிநஞ்சம்மா என்கிற அந்த சகோதரிக்கு அற்புதமான முறையிலே தேவன் சுகமருளினார். அதே பகுதியிலிருந்த திருமதி. மதுரம்மா என்பவர் அநேக ஆண்டுகளாக அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு, விடுதலை இல்லாமல் மரணத்தின் விளிம்பிலிருந்த அவருக்காக பாரத்தோடு ஜெபித்த பொழுது, கர்த்தர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து பூரண சுகம் தந்தார். இவர்கள் ஆரம்பகால விசுவாசிகளாவர். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தது மட்டுமல்லாமல், பெத்தேலில் நடைபெற்றக் கூடுகையில் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டு அவர்கள் வாழும் கக்கதாசம் கிராமத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தனர்.

இதே பகுதியிலிருந்த திருமதி. முனிநஞ்சம்மா அவர்களின் மகன் திரு. கரியப்பா என்பவர் தனது பிள்ளைகளை மட்டுமே ஆராதனைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அவரும் பின்னாளில் தனது தாயாருக்கு சுகம் கொடுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து ஒரே நாளில் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இவர்களைக் கொண்டு ஆராதனைக் குழுவானது எளிய முறையில் திருமதி. மதுரம்மா அவர்களின் இல்லத்தில் வைத்து முதலாவதாக ஆரம்பமானது. அங்கு ஆராதனை நடத்தக் கூடாதபடி எதிர்ப்பு வந்ததால் திருச்சபை மூப்பரான திரு. சாமுவேல் கரியப்பா அவர்களின் இல்லத்தில் ஆராதனை நடைபெற்றது. விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகமானதால் வாடகைக்கு ஒரு இடத்தை கண்டுபிடித்து அநேக நாட்களாக அங்கு தேவனை ஆராதித்து வந்தனர்.

வாடகை வீட்டில் ஆராதித்து வந்த அவர்கள் ஆலயத்திற்காக ஜெபித்தனர். தேவனுடைய கிருபையினாலும், மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் திருச்சபைத் தலைவர்களின் தீவிர முயற்சியினாலும் தேன்கனிக்கோட்டையிலிருந்து தளி செல்லும் பிரதான சாலையிலே ஆலயத்திற்காக 25 சென்ட் நிலம் கிடைக்கப்பெற்று, ஆலயத்தையும் கட்டி முடித்தனர். 23.07.2006ஆம் ஆண்டு தேவ நாம மகிமைக்கென்று தேவாலயம் பிரதிஷ்டைச் செய்து தேவனைக் கிரமமாக ஆராதித்து வருகின்றனர். சர்வ வல்லமையுள்ள தேவனுக்கே சதாகாலமும் மகிமை உண்டாவதாக. ஆமென்!

### துதிக்க:

★ எந்த ஒரு அடிப்படை வசதியுமில்லாத இந்த குக்கிராமங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ தீபத்தை ஏற்றி வைத்த நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னோடி மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

★ இப்பகுதியிலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திடாத இந்தியர்களுக்கு இயேசுவை அறிவிக்கச் சென்றுள்ள இளம் மிஷனெரிகளுக்காக சர்வ வல்ல தேவனைத் துதிப்போம்.

### ஜெபிக்க:

★ கக்கதாசம் கிராமத்தில் ஆரம்ப நாட்களில் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தற்போது கிறிஸ்தவ விசுவாசத்தில் சோர்ந்து போய் இருப்பவர்கள் மீண்டும் ஆலயம் வந்து தேவாதி தேவனைத் தொழுதுக்கொள்ள ஜெபியுங்கள்.

★ இதுபோன்ற கிராமத் திருச்சபைகளில் ஆர்வத்தோடு தேவப்பணியைச் செய்வதற்கு அர்ப்பணமுள்ள இளம் சுதேசப் ஊழியர்கள் திரளாக வர பாரத்தோடு ஜெபியுங்கள்.

★ இந்த திருச்சபையின் மூலமாக நடைபெறும் குழு ஊழியம், இரவு ஜெபம், உபவாசக் கூட்டம், வீடுகளைச் சந்தித்தல் மற்றும் புதிய கிராமங்களில் நற்செய்தியறிவித்தல் போன்ற ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.



Rev. Ruban Ramalingam

# ஜெபிக்கலாம் வா...

VIRAL NEWS



## தேசத்தில் அதிகரிக்கும் ஜாதி பிரிவினைகள்

- கொலை செய்யப்பட்ட கவின் அவர்களின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் கொடுக்கவும் மற்றும் இவர்களுக்கு நீதி கிடைக்கவும் ஜெபிப்போம்.
- இது போன்ற ஜாதி பிரிவினைகள் இந்தியர்களிடமிருந்து ஒழிந்து, ஒற்றுமையில் வளர ஜெபிப்போம்.

Tirunelveli 'honour' killing case: Dalit software engineer hacked to death in Tamil Nadu

## தேசத்தில் வரும் இயற்கை பேரிடர்கள்

- தேசத்தில் வரும் இயற்கை பேரிடர்களிலிருந்து தேவன் நம் தேசத்தை காக்க ஜெபிப்போம்.
- இது போன்ற பேரிடர்களில் சிக்கிய மக்களையும், அவர்களின் குடும்பங்களையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.



Floods and landslides in Indian Kashmir kill 60, over 200 missing



Mumbai Floods: Indian City on Red Alert for Further Rain



## தேசத்தில் சுதந்திரத்தை எதிர்க்கும் சட்டங்கள்

Bill amending Uttarakhand anti-conversion Act includes prison sentences ranging from three years to life term


- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் சுதந்திரங்களை மக்கள் முழுமையாகப் பயன்படுத்தும் சூழல் உருவாக ஜெபிப்போம்.
- மக்களையும், தேசத்தையும் ஒடுக்கும் அவல நிலை மாற ஜெபிப்போம்.

## தேசத்தின் எல்லைகளில் காணப்படும் பதற்றங்கள்

India condemned Nepal's opposition to the resumption of India-China trade through the Lipulekh Pass, calling Kathmandu's territorial claims over the Kalapani region unjustified and historically unfounded.

இந்திய தேசத்தின் எல்லைகளில் காணப்படும் பதற்றங்கள் மாறி, சமாதானம் நிலவ ஜெபிப்போம்.







## மனதில் விதைக்கப்படும் தற்கொலை எண்ணங்கள்

Belagavi Institute of Medical Sciences PG Medico Commits Suicide by Medicine Overdose

- மக்களின் மனதில் எழும்பும் தற்கொலை எண்ணங்களைத் தேவன் நீக்கிப்போட ஜெபிப்போம்

## துன்புறுத்தலைச் சந்திக்கும் கிறிஸ்தவம்



334 Cases of 'Systematic Targeting Against Christians in India' since January 2025

- கிறிஸ்துவின் பெயரால் துன்புறுத்தப்படும் சபைகளுக்காக ஜெபிப்போம்.
- தேசத்தில் இது போன்ற அநியாயங்கள் நடக்காமல், நீதி நிலைநாட்டப்பட ஜெபிப்போம்.



## சிறுவர்களின் மனதில் வளரும் கொடூரங்கள்

Ahmedabad School Horror: Minor Kills Senior, Sparking Outrage And Soul-Searching

- சிறுவர்களின் மனதில் நன்மைகள் விதைக்கப்படவும், நல்ல வழியில் வளரவும் ஜெபிப்போம்
- கொலை செய்ய தூண்டும் கிரியைகள் அனைத்தும் அழிக்கப்பட ஜெபிப்போம்

# கடற்கரை ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. Isaac

இயேசுவின் பெயரை வைத்து ஆரம்பமாகும் ஊழியங்கள் பெருகிவிட்ட இந்த காலத்தில் இயேசுவின் ஊழியத்தை வைத்து ஊழியங்கள் ஆரம்பித்தால் எப்படி இருக்கும் என்று நினைத்தபோது தோன்றிய கருத்துக்கள் தான் இந்த செய்தி. கடந்த எட்டு செய்திகளும் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும். இந்த வரிசையில் நாம் தெரிந்து கொள்ள போவது “கடற்கரை ஊழியம்”. நம் தேசத்தை எடுத்துக் கொண்டால் முதல் நூற்றாண்டில் இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமா காலம் தொடங்கி, 1700இல் பர்த்தலோமேயு சீகன்பால்க் வரை அநேக மிஷனெரிகள் கடற்பயணம் மூலம் கடற்கரை கிராமங்களை வந்தடைந்தனர். பின்பு அதே கடற்கரை கிராமங்களைப் பணித்தளமாக மாற்றி ஊழியம் செய்தனர். அதன்விளைவு கடற்கரை கிராமங்கள் மற்றும் பட்டணங்களில் சபைகள் பெருகி, இந்திய திருச்சபைக்கு அஸ்திபாரமாக அமைந்தது. வரலாற்றைப் பார்க்கும்போது அது வல்லமையான ஊழியம் என்றால் மிகையாகாது. குறிப்பாக 5ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரை ரோமானிய சபையின் மிஷனெரிகள் இந்தியாவில் தடம் பதித்த வரலாறு மிக ஆச்சரியமானது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய ஒருவர் பெயரை நாம் அறியவேண்டுமானால், அவர் புனித பிரான்சிஸ் சவேரியார். இதன் விளைவு மலபார், மேற்கு கடற்கரை, கிழக்கு கடற்கரை கிராமங்கள் என முழுவதும் இன்று கிறிஸ்தவ கிராமங்கள். ஏன்? மீனவ சமுதாயம் முக்கால்வாசி கிறிஸ்தவர்கள் என்றால் இந்த ஊழியத்தின் சிறப்பு அவ்வளவு பெரியது.

இப்போது இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு வருவோம். இயேசுவின் ஊழியத்தை வேதவியல் ஆய்வாளர்கள் பிரிக்கும்போது அதை கலிலேய ஊழியம் 1 மற்றும் 2 என்று தான் இயேசுவின் ஊழியத்தை வகைப்பிரிக்கின்றனர். இயேசு தனது ஊழியத்தை ஆரம்பித்தது கடற்கரையில் தான். மத். 4:13இல் “நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்” என்று இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தை பதிவு செய்கிறது. பின்பு தனது சீஷர்களை தேர்வு செய்தது கடற்கரையில் தான் (மத். 4:18-22, மாற்கு 1:16-20, லூக்கா 5:1-11). பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் என அனைவரும் மீனவர்கள் என்றால் எத்தனை ஆச்சரியம். அது மட்டுமா, இயேசு தன் போதனைகளை (லூக்கா 5:1-3, மாற்கு 4:1, 2) பெரும் கூட்டத்தினருக்கு படகிலிருந்து தான் பிரசங்கம் பண்ணினார். நாம் ஏற்கனவே அறிந்ததுபோல புயலை அமர்த்தினார் (மத். 8, மாற்கு 4, லூக்கா 8). 5000 பேருக்கு உணவளித்ததும் கடற்கரை பகுதியில் தான் (மத். 14 மாற்கு 6, லூக்கா 9, யோவான் 6). தண்ணீர் மேல் நடந்தது (மத். 14, மாற்கு 6, யோவான் 6). சுகம் அளித்தது (மத். 8, மாற்கு 5, லூக்கா 8) என அடுக்கிக்கொண்டே போகலாம். இயேசுவின் இறுதிப்பகுதியைக் கவனித்தால் உயிர்த்தெழுந்த பிறகு அவர் திபேரியா கடல் பகுதியில் தனது சீஷர்களுக்கு தரிசனமானார். அப்படியென்றால் கடற்கரை கிராமங்கள் இயேசுவுக்கு அலாதி பிரியமா? அப்படி கூட இருக்கலாம்.

நம் தேசத்திற்கு வந்த மிஷனெரிகள் அனைவரும் விமானத்தில் பறந்து வந்து ஊழியம் செய்தவர்கள் அல்ல. அன்றைய வசதிப்படி சுவிசேஷ தாகத்தால் கடற்பயணம் மேற்கொண்டவர்கள். கடற்பயணமும் சொகுசு கப்பல் அல்ல. அதுவும் வணிகக் கப்பலில் பயணித்தவர்கள். இந்தியாவிலுள்ள மிளகு, அதற்கு அழகிய வர்ணமோ, வடிவமோ, மனமோ, சுவையோ கிடையாது. ஒரு சில மருத்துவ குணங்களை உடைய திரவியத்தை வாங்க இரண்டாவது முறையாக கப்பலில் வந்து இறங்கியவர்தான் சீகன்பால்க். மேலும் கப்பல் பயணத்தை மேற்கொண்ட மிஷனெரிகள் அனைவரும் கடற்கரை கிராமங்கள் மற்றும் கடற்கரை வழியாக நீண்ட நெடிய பயணங்களை மேற்கொண்டார்கள். விளைவு, இந்திய கிறிஸ்தவம் இந்திய கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் தான் அதிகம் காணப்படுகிறது. மேற்கு கடற்கரையாகிய மேல் மும்பை துவங்கி, கீழ்நோக்கிய கேரளா கடற்கரை, கன்னியாகுமரி, அதைத் தொடர்ந்து கிழக்கு கடற்கரை ஒரிசா வரை பரவிச் கிடக்கிறது. ஆனால் இன்றைய நிலை கடற்கரை கிராமங்கள் எழுப்புதலின்றி ஆணித்தரமான பாரம்பரியத்தாலும், மத மூடப்பழக்கவழக்கத்தாலும் வழிபாட்டு பூஜை, சடங்குகள் மற்றும் கிறிஸ்துவோடு கூடிய மேரி மாதா வணக்கம் என எண்ணிக்கை கிறிஸ்தவமாக உள்ளது. இவர்கள் உயிரடைய வேண்டும் என்பதுதான் நம் தாகம் மற்றும் ஆசை.

இந்த கடற்கரைக் கிராமங்கள், நீங்கள் அதிகபட்சம் எட்டிவிடும் தூரத்தில்தான் உள்ளது. இங்கு சென்று ஜெபிக்க, எழுப்புதலுக்கென்று பிரசங்கிக்க, உழைக்க இளைஞர் சமுதாயம் தேவை. நீங்கள் வரவேண்டும். மீனவ சீஷர்கள் மற்றும் மீனவர்களோடு பயணித்த இயேசு, காப்பு பிடித்த உள்ளங்கைகளை உடையவர். ஆனால் இன்று காயம்பட்ட கைகளோடு உன்னை அழைக்கிறார்.

இயேசுவோடு கைகோர்த்து கடற்கரையில் நடக்கலாம் வா!

அப்போது எழுப்புதல் தேசத்தின் மையப்பகுதியையும், இமயம் சார்ந்த மாநிலங்களையும் எளிதாக சென்றடையும்.





# கோபப்படுங்க ப்ளீஸ்

Mr. Isaac Kamalesh

“வறண்ட வெளியிலே உன்னதமானவருக்குக் கோபம் மூட்டினார்கள்” என்றால் உன்னதமான தெய்வத்துக்கு கோபம் வருமா? “அவர் (இயேசு) விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து” என்ற வசனத்தின்படி “இயேசுவுக்கு கோபம் வருமா?”

இந்த இரு வசனங்களை இப்பொழுது வாசித்த பிறகு ஒரு சிலர் “ஆம்!!” என்று தங்களுக்குள்ளே பதில் சொல்லிவிட்டு, சுய ஆறுதலையும் பெற்றிருப்பார்கள். ஆனால் அனுதின வாழ்க்கையில் நாம் கோபப்பட்டால் “நீயா கோபப்படுகிறாய்?”, “ஏன் இவ்வளவு கோபம்?”, “நல்லவன் மாதிரியே நடிக்கிற”, “ஆனால் கோபம் மட்டும் ஏன் இவ்வளவு?, “எடுத்ததுக்கெல்லாம் கோபப்படாதீங்க”, “கோபத்தை அடக்கு” என பல சொற்கள் நம்மை நோக்கி வரும்போது. “நான் எங்க கோபப்பட்டேன்” என்று தற்காப்புக்காக பதிலளித்தாலும், நமக்குள்ளே ஒரு கேள்வி, இந்தக் கோபத்தை நம்மால் அடக்க முடியாதா? இந்த கோபம் நம் பெயரை கெடுத்து விட்டதே என்று எண்ணிய தருணங்கள் அதிகம்.

உண்மையில் கோபம் என்றால் என்ன? அது நல்லதா? கெட்டதா? எனக் கேட்டால், கோபம் என்பது நமக்கு ஒரு தவறு, அநீதி, அச்சுறுத்தல், புண்படுத்துதல், நியாயமற்ற செயல் அல்லது விரக்தி என உணரும் பொழுது ஏற்படும் உணர்ச்சி பூர்வமான பதில் வினையாகும். இது நல்லதா, கெட்டதா என்று சூழ்நிலை அல்லது கோபத்தின் நிலை தான் தீர்மானிக்கும்.

கோபத்தில் சில வகைகள் எனப் பார்க்கும் பொழுது

1. பொங்கி எழுந்த கோபம் (காயீன், ஆதி. 4).
2. செயலற்ற கோபம் (இளையக் குமாரனின் அண்ணன், லூக்கா 15).
3. பழிவாங்கும் கோபம் (சிம்சோன், நியா. 15).
4. சுயமாக தனக்குத்தானே ஏற்பட்ட கோபம் (யூதாஸ், மத். 27). 5. ஆழ்மன அதீத கோபம் (ஏசா, ஆதி. 27).
5. நீதிக்கான கோபம் (இயேசு, யோவான் 2).

இன்னும் சில வகைகள் கூட கூட்டலாம். ஆனால் கோபம் அதிகரிக்கும் பொழுது அல்லது தொடர்ந்து கோபத்தில் நிலைத்திடும் பொழுது, அது உடல் உபாதைகளை ஏற்படுத்தும். ஏன் இதயக் கோளாறு, தசைப்பிடிப்பு, மறதி, நரம்பு தளர்ச்சி என சில வேண்டாதப் பிரச்சனைகளை நமக்குள்ளே உண்டாக்கும்.

இந்த கோபத்தைப் போக்க முடியாது. ஆனால் கையாள கற்றுக் கொள்ள முடியும். அதில் சில படிகளை கீழே வாசிக்கலாம். நடைமுறை முயற்சியாக நீங்கள் கோபப்பட்டால் உடனே எண்களை ஒன்று முதல் எண்ணுங்கள். மேலும் மூச்சு பயிற்சி, நடைப்பயிற்சி, தண்ணீர் குடித்தல் போன்றவைகளையும் செய்யலாம். இருந்தாலும் அது அநேக நேரங்களில் சாத்தியமாகாமல் போய் விடும். தற்போது மூன்று முக்கிய நடைமுறைகளை நாம் படித்துவிட்டு, சில தகவல் தொடர்பு நடத்தைகளைக் கற்று முடிக்கலாம்.

**1. கட்டுப்படுத்துங்கள் (Restrain it).**
நீதி. 29:11, இந்த வசனத்தின் அர்த்தம் அதை வெளிப்படுத்தும் விதத்தை கையாளுகிறது என்பது. உங்கள் உணர்ச்சிகள் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் உணர்ச்சியின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது.

**2. மறு மதிப்பீடு செய்யுங்கள் (Re-evaluate it) .**
யாக். 1:19-20, சற்று நிதானத்துடன் நம்மை மறு மதிப்பீடு செய்து உங்களுக்கு எதிரே உள்ள நபரின் நிலை அல்லது எதிர்பார்ப்பு, நோக்கம் இவைகளை அறிந்து கொண்டால் நாம் நிதானத்துடன் நடந்து கொள்ள முடியும்.

**3. விட்டுவிடுங்கள் (Release it).**
கொலோ. 3:8, வெளிப்படுத்த மற்றும் அதை நேராக கையாள உரிமை உண்டு. அதேபோல் அதே நேரத்தில் அதை விட்டுவிட வேண்டும். மனதிலோ, உள்ளத்திலோ, மூளையிலோ சேமித்து வைக்கக் கூடாது.

கடைசியாக சில அறிவுரைகள் (எபே. 4:15, 25-32) நேர்மையாக மற்றும் அன்பாக இருக்க வேண்டும். மற்றவர்களின் உணர்ச்சிகளை ஒப்புக்கொள்ள வேண்டும் (I பேதுரு 3:8-17). கருத்து வேறுபாட்டை பேசி தீர்க்க வேண்டும். நிகழ்காலத்தில் மட்டும் வாழ வேண்டும். கடந்த காலத்தை எடுத்து பேசக்கூடாது (யாக். 3:13-18). பிரச்சனைகளை மட்டும் பேசவேண்டும். நபர்களைத் தாக்கக் கூடாது. உறவை மீட்டெடுக்க வேண்டும். எதிர்வினை ஆற்றக் கூடாது. கர்த்தருடைய வார்த்தைக்கு உங்கள் மனநிலையைக் கட்டுப்படுத்த வேண்டும் (நீதி. 25:26, எபி. 12:15).

**இவைகளைக் கடைப்பிடித்தால் நீங்கள் கோபத்திலும் அழகாக இருப்பீர்கள். எனவே இப்போது கோபப்படுங்க ப்ளீஸ்.**



# நீதிமானின் வாசற்படியில்

| | | |
|---|---|---|
| ஆணவமுள்ள துன்மார்க்கன்<br>கொடுமையான எண்ணம்<br>கொடூர செயல் கொண்டோர்<br>கொலைக்கு அஞ்சாதவர்கள் | - காயீன் | (சங்கீதம் 140:1) |
| அடங்காத துன்மார்க்கன்<br>அழுக்கான வாழ்வு<br>அராஜக தொனி, அசட்டு வார்த்தை<br>ஆண்டவரை எதிர்ப்பவர்கள் | - பார்வோன் | (ஏசாயா 57:20) |
| அடக்குமுறை துன்மார்க்கன்<br>அரசாளும் வர்க்கம்<br>ஆண்டி சொத்தில்<br>ஆசை | - யேசபேல் | (ஏசாயா 10:1, 2) |
| அகந்தையுள்ள துன்மார்க்கன்<br>தேவைக்கு மிஞ்சிய செல்வம்<br>தேடியது - சுயம், பெருமை, இன்பம்<br>தேடாதது - தெய்வத்தை | - நேபுகாத்நேச்சார் ராஜா | (சங்கீதம் 10:4) |
| அவமதிக்கும் துன்மார்க்கன்<br>அலசி ஆராய்வார்கள்<br>அலட்சிய போக்கில்<br>ஆண்டவரை விட்டுவிடுவார்கள் | - தீர்க்கதரிசிகளை கேலி செய்தவர்கள் | (சங்கீதம் 1:1) |
| அவபக்தியுள்ள துன்மார்க்கன்<br>உள்ளே அழுக்கு வெளியே அழகு<br>உன்னதம் காண<br>உள்ளம் அற்றவர்கள் | - பரிசேயர்கள் | (மத்தேயு 23:27) |
| அவிசுவாச துன்மார்க்கன்<br>கற்பனைகளை விட்டவன்<br>கண் போன போக்கில் வாழ<br>கடவுளை காட்டிக்கொடுப்பவன் | - யூதாஸ் காரியோத்து | (2 பேதுரு 2:21) |
| அநியாய சூழ்ச்சிகார துன்மார்க்கன்<br>யாவரும் சமம்<br>யார் அறிவார் எண்ணம்<br>யதார்த்தத்தை விட்டவர்கள் | - அனனியாவும், சப்பீராளும் | (சங்கீதம் 52:33) |
| ஆன்மீகக் குருட்டு துன்மார்க்கன்<br>மனதில் மமதை<br>மனமாற்றத்திற்கு விலகிய - இவர்கள்<br>மலட்டு புத்தியுள்ளோர் | - ரோம சபை மக்கள் | (ரோமர் 1:21) |

துன்மார்க்கத்தின் வகை ஒன்பது
அவன்(ள்) - செல்வந்தனோ, செல்வாக்குள்ளவனோ,
அவன்(ள்) - அரசாளுபவனோ, அதிகாரமுள்ளவனோ.



**அனைவரும் உன் வீட்டு வாசற்படியில் குனியும் காலம்**
**ஆனால் நீ அசாத்திய நீதிமானாய் இருக்கவேண்டும்!**
**(நீதி. 14:19)**

# மாம்சீகமும், கிறிஸ்தவமும் (CARNAL VS CHRISTIAN)

Rev. Daniel Gnanapragasam



"THE ENEMY IS US" இந்த வார்த்தை கார்ட்டூன் ஸ்ட்ரிப் போகோவை நமக்கு நினைவூட்டலாம். அதில் வரும் ஹீரோ "நாங்கள் எதிரியைச் சந்தித்தோம்; அது நமக்குள்ளே இருக்கிறது" என்பார். இதையே பவுலும் "என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது" (ரோமர் 7:23) என்கிறார்.

இதில் இரண்டு விதமான பிரமாணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. மனதின் பிரமாணம்: அது தன் ஜீவனைக் கொடுத்து நம்மை மீட்டுக்கொண்ட கர்த்தருக்கு நம்மை ஒப்புவிக்கவேண்டும் என்று விரும்புகிற பவுலின் மனதின் பிரமாணம்.
2. போராடுகிற வேறொரு பிரமாணம்: மனதின் விருப்பமான, பரிசுத்த வாழ்விற்கு எதிரான மாம்சக்கிரியைகளை வெளிப்படுத்தும் பாவப்பிரமாணம்.

உலகம் என்பது ஏதேனில் துவங்குகிறது. அது பாழ்படுத்தப்பட்டு தேவனுடைய திட்டத்திற்கு விலகிச்சென்று CARNAL என்று அழைக்கப்படுகின்ற மாம்சக்கிரியைகளை வெளிப்படுத்துகிறது. இந்த மாம்சக்கிரியைகளை தம் மாம்சத்தினால் மேற்கொண்ட கிறிஸ்து இயேசுவிலிருந்து CHRISTIAN என்று சொல்லப்படுகின்ற கிறிஸ்தவ வாழ்வு துவங்குகிறது. கிறிஸ்து அல்லாதவர்கள் மாம்சத்தால் வீழ்ந்த மனித இயல்பான மாம்சீகத்தால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு அதன் கட்டுப்பாட்டிலும், அதிகாரத்திலும் சிறையாகிக் கொள்கிறார்கள்.

| | மாம்சீகம் | கிறிஸ்தவம் |
|---|---|---|
| 1. | உடல் சார்ந்த மாம்சீக வாழ்வு. | உணர்வு சார்ந்த ஆன்மீக வாழ்வு. |
| 2. | இம்மைக்குரிய உலக வாழ்வு (To be focused on earthly). | மறுமைக்குரிய நிலை வாழ்வு (To be focused on heavenly). |
| 3. | நோக்கமின்மை மற்றும் கடவுளற்ற வெறுமையை இயல்பில் கொண்டவர்கள். | நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியை இயல்பாகக் கொண்டவர்கள். |
| 4. | உலக பெற்றோரின் மாம்ச சுபாவங்களைக் கொண்டவர்கள். | கிறிஸ்துவில் பிறந்த மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்றவர்கள். |
| 5. | உலகத்தோடு ஒத்த வாழ்வும், சமரசப் போக்கும் உடையவர்கள். | எந்தச் சூழலிலும் சமரசம் செய்யாத வேறு பிரிக்கப்பட்ட வாழ்வு வாழ்பவர்கள். |
| 6. | சுயநலமான, பாரபட்சம் நிறைந்த வாழ்வை வெளிப்படுத்துபவர்கள் (ரோமர் 8:5, 6). | பிறர் நலனில் அக்கறை மற்றும் பட்சபாதமின்றி செயல்படுபவர்கள். |
| 7. | பரவசமான நிலையே பரிசுத்தம் என்று நம்புபவர்கள். | பரிசுத்தமே பரவசம் என்று ஒப்புக்கொள்பவர்கள். |
| 8. | பெலகீனமான உபாதைகள் நிறைந்த வாழ்வு (மத். 26:41). | உற்சாகமான சுகஜீவியம் நிறைந்த வாழ்வு. |
| 9. | ஆன்மீக மரணத்தில் உள்ளவர்கள். | மாம்சக் கிரியைகளுக்கு மரித்தவர்கள். |
| 10. | கர்த்தரின் வார்த்தைக்கும், ஆவியானவரின் வழிநடத்துதலுக்கும் அப்பாற்பட்டவர்கள். | கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரின் வழி நடத்துதலுக்கு உட்பட்டவர்கள். |

THE DISTINCTION BETWEEN CARNAL AND CHRISTIAN LIFE IN THE SOURCE OF ONE'S MOTIVATION AND THE DIRECTION OF ONE'S LIFE.

கார்னே என்பது இறைச்சிக்கான ஸ்பானிஷ் வார்த்தையாகும். மாம்ச மனப்பான்மை என்பது விலங்குகள் வாழ்வின் விஷயங்களைப் பின்பற்றுவதாகும். உங்கள் வாழ்வை எதற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள்? மாம்ச சிந்தைக்கா? அல்லது ஆவியின் சிந்தைக்கா?

"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்".
(யோவான் 3:6)



# மாதிரி குடும்பமாக இருப்பதின் மூலம் ஊழியம்

Mr. Israel Nathaniel Edward



“ஊழியம்” (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்குச் சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் மாதிரி குடும்பமாக இருப்பது எவ்வாறு ஊழியம் செய்ய வாய்ப்பளிக்கிறதெனப் பார்க்க இருக்கிறோம்.

முதல் நூற்றாண்டில் ரோம சாம்ராஜ்யத்தில் திருமணம்:

முதல் நூற்றாண்டு ரோமில், ஒருவர் குறைந்தது நான்கு வெவ்வேறு வழிகளில் திருமணம் செய்துக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான அடிமைகள் இருந்தனர். அவர்கள் மனிதர்களாகக் கூட கருதப்படவில்லை. அவர்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அவர்களின் உரிமையாளர் ஒன்றாக வாழும் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்வார். இது “கூடாரத் தோழமை” என்று அழைக்கப்பட்டது. உரிமையாளர் எப்போது வேண்டுமானாலும் இந்த உறவை முறித்து விடலாம் அல்லது அவர்களில் ஒருவரை விற்று விடலாம். இரண்டாவது வழியில், ஒரு பெண்ணும் ஆணும் ஒரு வருடம் ஒன்றாக வாழலாம். ஒரு வருடம் முடிந்ததும், அவர்கள் கணவன் மனைவியாக அடையாளப்படுத்தப்படுவார்கள். மூன்றாவது வழி, விற்பனை மூலமாக திருமணம். இதில் ஒரு தந்தை தன் மகளைக் கணவனுக்கு விற்பார். நான்காவது வழி மிக உன்னதமானது. இதில் இரண்டு குடும்பங்கள் ஒரு மாலை நேரத்தில் ஒன்று சேரும். தம்பதியர் வலது கைகளை இணைத்து வாக்குறுதிகளை அளிப்பர். வாக்குறுதிகளுக்குப் பிறகு, ஜுபிடர் மற்றும் ஜுனோ தெய்வங்களுக்குப் பிரார்த்தனைகள் செலுத்தப்படும். இன்றைய திருமணங்களைப் போலவே, மணமகனின் தோழர், பூக்கள், முக்காடு, மோதிரங்கள் மற்றும் கேக் ஆகியவை இருந்தன. ஆனால் திருமணத்திற்குள் அறநெறி மிகவும் சீரழிந்திருந்தது. விவாகரத்து மிகவும் பரவலாக இருந்தது. 29 முறை திருமணம் செய்து கொண்டவர்களின் பதிவுகள் உள்ளன. ஒழுக்கக்கேடு மற்றும் பரவலான ஒரேபாலின உறவுகள் இருந்தன. ஆண்கள் தங்கள் மனைவிகளை வீட்டு வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தினர். மற்ற பெண்களைத் தங்கள் இன்பத்திற்காக வைத்திருந்தனர். அதற்கு மேல், ரோமப் பேரரசில் பெண்ணிய கிளர்ச்சியும் இருந்தது. பல மனைவிகள் தங்கள் அழகை இழக்கப் பயந்து குழந்தைகளைப் பெற விரும்பவில்லை.

இந்த பெரும் குழப்பத்திலிருந்து மக்கள் திருச்சபைக்குள் நுழைந்தனர். அவர்களுக்கு பவுல் எழுதினது: “மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிந்திருக்கிறதுபோல உங்கள் புருஷர்களுக்குக் கீழ்படிந்திருங்கள். திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்திருக்கிறதுபோல, மனைவிகள் எல்லாவற்றிலும் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்படியக்கடவர்கள். புருஷர்களே, கிறிஸ்து திருச்சபையைக் காத்து அதற்காகத் தன்னை ஒப்புக்கொடுத்ததுபோல, உங்கள் மனைவிகளைக் காத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு புருஷனும் தன் மனைவியைத் தன் சரீரமாகக் காத்துக்கொள்ளக்கடவன். தன் மனைவியில் அன்புகூருகிறவன், தன்னில்தான் அன்புகூருகிறான்.

பிள்ளைகளே, கர்த்தருக்குள் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். இது நீதியானது. தகப்பன்மார்களே, உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருடைய பயிற்சியிலும், உபதேசத்திலும் அவர்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனதோடும் கீழ்ப்படியுங்கள். எஜமான்களே, அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். அவர்களை மிரட்டாதிருங்கள்; அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானர் பரலோகத்தில் இருக்கிறார் என்பதை அறிந்திருங்கள். அவர் பட்சபாதம் காட்டமாட்டார்.

திருமணமாகாதவர்களுக்கும், விதவைகளுக்கும் சொல்லுகிறேன். என்னைப் போலவே அவர்களும் தனித்திருக்கிறது நலமாயிருக்கும். ஆனால் அவர்கள் தன்னடக்கமில்லாமல் இருந்தால், அவர்கள் திருமணம் செய்துகொள்ளட்டும். ஆவி கொந்தளிக்கும் நிலையில் இருப்பதைவிட திருமணம் செய்துகொள்வது நல்லது

(எபே. 5:22, 1 கொரி. 7:8-11). எனவே முதல் நூற்றாண்டில் திருமணத்தில் நிலைத்திருத்தல் மற்றும் கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றி விசுவாசமாக அவருக்கு சேவை செய்வது ஒரு சவாலாக இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால், பலர் சுவிசேஷத்தால் பரிசுத்தமாக்கப்பட்டு, மற்றவர்கள் பின்பற்றக்கூடிய மாதிரி வாழ்க்கையை வாழ்ந்தனர். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்படிப்பட்ட ஒரு குடும்பமாக இருந்தனர்.

- 5ம் பக்கத்தின் தொடர்ச்சி

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும்: ஒரு மாதிரி குடும்பம்:

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் பொந்து (இன்றைய துருக்கியின் ஒரு பகுதி) என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். கி.பி. 49இல் கிளாடியஸ் பேரரசர் யூதர்களை வெளியேற்றியதால், அவர்கள் ரோம் நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர் (அப். 18:2). இந்த வெளியேற்றம் யூத கிறிஸ்தவர்களின் குழப்பங்களால் ஏற்பட்டதாலும், லூக்கா அவர்களின் மனமாற்றத்தைப் பற்றி பேசவில்லை என்பதாலும், அவர்கள் பவுலைச் சந்திப்பதற்கு முன்பே கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்று கருதப்படுகிறது. அவர்கள் யூத கூடாரம் தைப்பவர்களாக அல்லது தோல் பணியாளர்களாக இருந்தனர். இதனால் அதே தொழிலைச் செய்த பவுலுடன் தொடர்பு கொண்டனர் (அப். 18:3). கொரிந்தில், பவுலின் பணிக்கு எதிர்ப்பு இருந்தபோதிலும், அவர்கள் மகிழ்ச்சியுடன் அவரைத் தங்கள் வீட்டில் விருந்தினராக ஏற்றனர். பின்பு அவர்கள் பவுலுடன் எபேசுக்கு பயணம் செய்து, அங்கு திருச்சபையில் முக்கிய பங்கு வகித்தனர் (அப். 18:18-19). அவர்கள் தேவனுடைய வழிகளில் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அதனால்தான் அவர்கள் திறமையான பிரசங்கியான அப்பொல்லோவை தேவனுடைய வழியில் மேலும் துல்லியமாக கற்பிக்க முடிந்தது (அப். 18:24-26). அவர்கள் அப்பொல்லோவின் அறிவுத் திறனால் திசைதிருப்பப்படவில்லை; மாறாக அவரை சுவிசேஷத்தின் சிறந்த சேவகராக மாற்ற துணிச்சலாக வழிநடத்தினர்.

அவர்கள் எபேசுவில் (1 கொரி. 16:19), பின்னர் ரோம் நகரில் (ரோமர் 16:3-5), ஒரு வீட்டுத் திருச்சபையை வழிநடத்தினர். பவுல் அவர்களைக் கிறிஸ்துவில் தனது உடன் பணியாளர்கள் என்று அழைக்கிறார். மேலும் அவர்கள் தனது உயிருக்காக தங்கள் கழுத்தைப் பணயம் வைத்ததாகக் குறிப்பிடுகிறார். இது அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக துன்பப்படுத்தப்பட்டதைக் குறிக்கிறது. அவர்களின் வரலாறு, ஆரம்பகால திருச்சபையில் விருந்தோம்பல், போதனை மற்றும் துணிச்சலான சீடத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்தவ சேவையில் திருமணக் கூட்டணிக்கு ஒரு மாதிரியாக அவர்கள் நினைவுக்கூரப்படுகிறார்கள்.

இன்றைய பாடம்:

நாமும் குழப்பமான காலங்களில் வாழ்கிறோம். எங்கும் திருமணங்கள் உடைந்து கொண்டிருக்கின்றன. இளையோரும், முதியோரும் பாலியல் காட்சிகளில் அடிமையாகி வருகின்றனர். திருமணங்களில் அன்பு, பொறுமை மற்றும் மன்னிப்பு மறக்கப்பட்ட நற்குணங்களாகிவிட்டன. ஆனால், ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவின் வாழ்க்கை நம்மை நல்லொழுக்கத்துடன் வாழவும், நம் குடும்ப வாழ்க்கையின் மூலம் சுவிசேஷத்தின் அழகை வெளிப்படுத்தவும் அழைக்கிறது. பலரை இரட்சிப்பின் வழிக்குள் நடத்தி, அவர்களை கிறிஸ்தவ நடத்தையில் வலுப்படுத்துவதற்கு கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. ஆமென்!

**ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவின் வாழ்க்கை நம்மை நல்லொழுக்கத்துடன் வாழவும், நம் குடும்ப வாழ்க்கையின் மூலம் சுவிசேஷத்தின் அழகை வெளிப்படுத்தவும் அழைக்கிறது.**

சாதுரியன்: யாக்கோபுக்கு வருவோம். அதாவது ஒரே தெய்வம் யெகோவா. தியானம் பண்ற ஒரு சூழ்நிலையில அவங்களால தியானம் கூட பண்ண முடியல. இப்போ செயலாக கடவுள் முன் செய்து காட்டினாங்க என்று தான் எபிரேய ஏடுகள் சொல்லுகிறது. அதாவது ஒட்டுமொத்த சுருக்கத்தையும் சொல்லிவிட்டு, ஆறு குறிப்புகளைச் சொன்னா புரியும். நேர்மையற்ற நிர்வாகம், குழப்பமான சூழ்நிலை, மனக்கஷ்டம் இவற்றின் மத்தியில் விசுவாசத்துடன் கடவுளுடைய வழி நடத்துதலை நோக்கி பொறுமையுடன் “தேவனின் பரிசுத்தம் நீதி உண்மையை’ நோக்கியிருக்க வேண்டும் என்பதே.

ரகசியம்: சுருக்கத்தை கேட்டாலே சுருக்குன்னு பிடிக்கு.

விஷயம்: நாமனா அழுது, கூப்பாடு போட்டு, சத்தம் போட்டு கடவுளுக்கு ஆலோசனை கொடுத்து. 100 க்கு 100 முறை தண்ணீருல சிலுவை அடையாளத்தைப் போட்டு. இயேசுவின் இரத்தம் ஜெயம்ன்னு சொல்லியிருப்போம் (எல்லோரும் சிரிப்பு)

சாதுரியன்: இப்போ குறிப்புகளை பார்ப்போம். கோல் (ROD) “மக்கல்” “Makal” பெரும்பாலும் அதிகாரம், தேவ வழி நடத்தல் அல்லது தெய்வீக தலையீட்டைக் குறிக்கிறது (மோசேயின் கோல் போல). வாதுமை மரம் (பாதாம்): புதிய தொடக்கங்கள் நம்பிக்கை, புதுப்பித்தல், மரத்தின் ஆரம்ப பூக்கள் புதிய வாழ்க்கையையும், வெற்றியையும் குறிக்கிறது. மேலும் கடவுளின் வாக்குறுதிகள் ஆசீர்வாதங்கள் மற்றும் விசுவாசத்துடன் தொடர்புடையது. அவருடைய வாக்குறுதிகளின் நிறைவேற்றத்தை நமக்கு நினைவூட்டுகிறது. புன்னை மரம்: வலிமை, மீள்தன்மை மற்றும் துன்ப காலங்களில் கர்த்தருடைய மக்களின் உறுதியைக் குறிக்கிறது. மேலும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் மீளுருவாக்கத்தைக் குறிக்கிறது. வேதத்தில் ஆழமான ஆன்மீக அர்த்தங்களைக் கொண்டுள்ளது. மற்றும் ஆன்மீக பயணத்தை மேம்படுத்துகிறது. செழிப்புக்கான அர்த்தத்தையும் தொடர்புடையது. அர்மோன் மரம்: பாதுகாப்பு மற்றும் தங்குமிடம், கருவுறுதல், மிகுதி மற்றும் செழிப்பு மறைக்கப்பட்ட பொக்கிஷங்கள் மற்றும் ஆன்மீக ஸ்திரத்தன்மை அல்லது நித்திய ஜீவனின் வாக்குறுதியாகவோ, விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றிய ஒரு உண்மையுள்ள மற்றும் நீதியுள்ள தன்மையை குறிக்கிறது. யாக்கோபு மந்திரத்தையோ, மூடநம்பிக்கையையோ பயன்படுத்தவில்லை. மாறாக கர்த்தரின் உடன்படிக்கையை நம்பி ஞானமாகவும், ஜெபத்துடனும் செயல்பட்டார். “உள்ளே வெள்ளை’ மறைக்கப்பட்ட ஆன்மீக யதார்த்தத்தை அல்லது உள் தெய்வீக ஒளியைக் குறிக்கிறது. வெள்ளை நிறத்தை வெளிப்படுத்த மரப்பட்டையை உரிக்கும் செயல், கடவுளின் உண்மையை வெளிப்படுத்த அடுக்குகளை உரிக்கும் கருத்தை பிரதிபலிக்கிறது. நீர்ப்பாசன தொட்டிகளுக்கு முன் வைக்கப்படும் தண்டுகள், மக்கள் முன் உண்மையையும், பரிசுத்தத்தையும் வைப்பதற்கு ஒப்பிடப்படுகின்றன. இது அடுத்த தலைமுறையை (சந்ததியினரை) வடிவமைக்கிறது.

விஷயம்: ஓஒ சூப்பர்டா நேரம் போனதே தெரியல. சரி வாங்கடா Pay பண்ணிட்டு கிளம்பலாம்.

சத்தியன்: டேய் முக்கியமான வசனம் யாக்கோபின் இந்த செயலின் விளைவு அந்த அதிகாரத்தின் கடைசி வசனத்தில் உள்ளது. வீட்டுக்கு போய் வாசியுங்க.

Rev. Prabakara Sarathy

# கிழக்கு வாசல்

நவீன மற்றும் டிஜிட்டல் வசதியுள்ள இக்காலகட்டத்தில் மக்கள் நம்பிக்கை மற்றும் ஒரு பிரகாசமான எதிர்காலத்தைத் தேடுகிறார்கள். மக்கள் பல்வேறு வழிகளில் நம்பிக்கையைத் தேடுகிறார்கள். நவீன தொழில்நுட்பமும், மேம்பட்ட அறிவியலும் உலக விஷயங்களை ஒழுங்கமைப்பதில் நன்கு முன்னேறி இருந்தாலும், யாருக்கும் ‘நம்பிக்கையை’ வழங்க முடியாது.

**கிழக்கு வாசல் - வரலாற்றுப் பின்னணி:**

நகரத்தின் கிழக்குச் சுவர், எருசலேமுடனான அதன் உறவின்படி கிழக்கு வாசல் என்ற பெயர் வழங்கப்பட்டது. சில வரலாற்றுக் குறிப்புகளின்படி, மேசியா திரும்புவதைத் தடுக்க, கிழக்கு வாசல் (தங்க வாசல் என்றும் அழைக்கப்படுகிறது) 1541ஆம் ஆண்டில் சீல் வைக்கப்பட்டது. கிழக்கு வாசல் கி.பி 1540-41இல் ஒட்டோமான் பேரரசின் சுல்தான் சுலைமான் உத்தரவின் பேரில் மூடப்பட்டது.

இது தற்போது பழைய நகரத்தின் பழமையான வாயிலாகும். இது கி.பி 6 அல்லது 7ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மேலும், தேவாலய மலைக்கு மிகவும் நேரடி அணுகலை வழங்கும் வாசல் இதுதான் - ஒரு நபர் கிழக்கு வாசலின் வளைவுகள் வழியாகச் சென்றால், அவர் யூத தேவாலயம் இருந்த இடத்திற்கு மிக அருகில் இருப்பார். இதை பழுதுபார்க்கும் பணியை வாசலின் பாதுகாவலனாக இருந்த செக்கனியாவின் மகன் செமாயா செய்தான்.

**கிழக்கு வாசல் - வேதாகம நம்பிக்கையின் பின்னணி:**

கிழக்கு வாசல் எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பிய சூழலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வாசல் சூரிய உதயத்துடன் தொடர்புடையது மற்றும் சிலரால் எதிர்காலத்திற்கான நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. கிழக்கு வாசல் கிறிஸ்துவின் வருகையின் அடையாளமாகக் காணப்படுகிறது, ஏனெனில் இயேசு தனது இரண்டாம் வருகையில் இந்த வாசல் வழியாக எருசலேமுக்குள் நுழைவார் என்று நம்பப்படுகிறது. கிழக்கு வாசல் நம்பிக்கையின் வாசலாகவும் பார்க்கப்படுகிறது. இது ஒரு புதிய நாளின் எதிர்பார்ப்பு மற்றும் வாழ்க்கையின் சோதனைகளின் முடிவைக் குறிக்கிறது. இயேசு மீண்டும் வருவார், அவர் பூமியில் தனது சிங்காசனத்தை ஸ்தாபித்து நித்திய அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை உள்ளது. இறுதியாக நாம் இயேசுவுடன் முழு உறவைக் கொண்டு, அவருடைய தலைமையின் கீழ் இருப்போம்.

**கிழக்கு வாசல் - மக்களுக்கான இன்றைய நம்பிக்கை:**

கிழக்கு வாசல் ஒலிவ மலைக்கு எதிரே உள்ளது. எனவே இது இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிப் பேசுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கை இந்த நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதையும், அவருடைய வருகைக்காக ஏங்க வேண்டும் என்பதையும் காட்டுகிறது. கிழக்கு வாசல் 810ஆம் ஆண்டு எருசலேம் நகரைக் கைப்பற்றிய முஸ்லீம்களால் அடைக்கப்பட்டது, பின்னர் சிலுவைப் போர்களின் போது 1102ஆம் ஆண்டு மீண்டும் திறக்கப்பட்டது. பின்னர் 1187ஆம் ஆண்டு சலாதீன் எருசலேமின் கட்டுப்பாட்டை மீண்டும் பெற்ற பிறகு மீண்டும் அடைக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. உதுமானிய சுல்தான் மகத்தான சுலைமான் வாசலை நகரச் சுவர்களுடன் மீண்டும் கட்டினான். ஆனால் 1541ஆம் ஆண்டு கிழக்கு வாசலை அடைத்தார். அது அப்போதிருந்து அடைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இது தீர்க்கதரிசனம் மற்றும் வாக்குத்தத்தத்தின் வாசலை குறிக்கிறது. இந்த வாசல் திறக்கப்படுவது அனைவரின் நம்பிக்கையாக உள்ள கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவாக இருக்கும்.

**கிழக்கு வாசல் - அனைவருக்கும் சமகாலத்திற்குப் பொருந்தும் நம்பிக்கை:**


கிழக்கு வாசல் வரலாறு மற்றும் வேதாகம சூழலில் குறிப்பிடத்தக்கது. இது எதிர்காலத்தில் திறக்கப்பட இருக்கிறது. இது யாராலும், எந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய நோக்கம் ஒருபோதும் மூடப்படாது என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் மீண்டும் கட்டப்படுவதில் மற்றும் எதிர்காலத்தில் திறக்கப்படுவதில் தெய்வீக நோக்கத்தைக் கொண்ட நம்பிக்கையை நிலைநிறுத்துகிறது. அதாவது இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு ராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் தனது ராஜ்யத்தை தனது சொந்த மக்களிடையே ஸ்தாபிக்க இரண்டாம் வருகையில் வருவார்.

**FMPB இயக்கத்திடமிருந்து தனிப்பட்ட விண்ணப்பம்:**

FMPB-யின் முதன்மை ஊழியம் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்வதாகும். நற்செய்தியை ஏற்றுக்கொள்பவர்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறது. ஏற்கனவே நற்செய்தியை ஏற்றுக்கொண்ட நூற்றுக்கணக்கான மற்றும் ஆயிரக்கணக்கானோர் வாழ்க்கைகள் மாற்றமடைந்துள்ளன. மேலும் அவர்கள் தங்கள் சொந்த சமூகத்தினருக்கு சாட்சி பகர்கிறார்கள். நற்செய்தி சென்றடையாத மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். இது நமது பொறுப்பு. நீங்கள் இந்த நற்செய்தியை அறியாத மக்களுக்கு அறிவித்தால் ஒழிய, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்க முடியாமல் போகலாம்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறியாத மக்களினங்களுக்கு அறிவிக்கும் மிஷனெரிகளாகச் செல்ல FMPB உங்களுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. ஜீவனுள்ள கர்த்தருக்காக நீங்களும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் வழியாக எங்களுடன் மிஷனெரியாக இணைந்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிருங்கள். இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கையான நற்செய்தியை அனைவருக்கும் கூறி நம்பிக்கையற்றவர்களைக் காப்போம் வாருங்கள்!!











பாடி, வேப்பேரி, மார்த்தாண்டம் கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார்

